விலை: 60.00
பக்கங்கள் : 20 + II

website : www.valampurii.lk
viber : 076 636 3378
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper In Srilanka


கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே


# வலம்புரி
## சங்குநாதம்


சங்கு 25
ஒலி 040 வள்ளுவர் ஆண்டு 2055 தை 14 ஞாயிற்றுக்கிழமை (28.01.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829


# பொதுச்சபைக் கூட்டத்தில் அமளி துமளி
## தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாடு ஒத்திவைப்பு
### பொதுச் செயலாளர் நியமனம் இழுபறி



(திருகோணமலை)

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 17ஆவது தேசிய மாநாடு காலவரையறையின்றி ஒத்திவைக்கப்படுவதாக அக்கட்சியின் முன்னாள் தலைவர் மாவை சேனாதி ராஜா அறிவித்துள்ளார்.

கட்சியின் உறுப்பினர்கள் இடையே இணக் கப்பாட்டுடன் தீர்மானங்களை எட்ட முடி 19

# சந்திரிகா தலைமையில் புதிய அரசியல் கூட்டணி
## தென்னிலங்கை அரசியலில் பரபரப்பு



(கொழும்பு)

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியை முதன்மையாகக் கொண்டு புதிய அரசியல் கூட்டணியொன்று அமைக் கப்படவுள்ளதாக அரசியல் வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

இந்தக் கூட்டணியின் தலைவராக முன்னாள் ஜனாதி பதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவு செய் யப்பட்டுள்ளதாகவும் இந்தப் பொறுப்பை ஏற்க அவர் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் செய்திகள் வெளி யாகியுள்ளன. (19ஆம் பக்கம் பார்க்க)

## ரூபாயின் பெறுமதி அதிகரிப்பு

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின் பெறுமதி 1.5 வீதத்தால் அதி கரித்துள்ளது.

இலங்கை மத்திய வங்கியினால் வெளி 20

## நெடுஞ்சாலை விபத்துக்களில் 6 பேர் உயிரிழப்பு

(கொழும்பு)

இந்த வருடத்தின் கடந்த 26 நாட்களில் நெடுஞ்சாலை களில் இடம்பெற்ற விபத்துக் களில் 6 பேர் உயிரிழந்துள்ள தாக வீதி அபிவிருத்தி அதி கார சபை தெரிவித் துள்ளது. 19

# நிகழ்நிலை பாதுகாப்புச் சட்டம் ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும்
### சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன



(கொழும்பு)

இணையவழி பாதுகாப்பு சட்ட மூலம் அதிகாரப்பூர்வ சட்டமாக அறிவித்து கையெழுத்திடப்படு வதற்கு முன்னர் மேலும் பல சட்ட ஆய்வுகளுக்கு உட்படுத்தப்படும் என சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தன தெரிவித்துள்ளார்.

உயர் நீதிமன்ற உத்தர வுக்கமைய சட்டவாக்கத் 02

# அரசின் இரு கட்டடங்கள் சிறைச்சாலையாக மாற்றம்
### நீதி அமைச்சர் விஜேதாஸ

(கொழும்பு)

அரசாங்கத்திற்குச் சொந்த மான இரண்டு கட்டடங்களை சிறைச்சாலைகளாக மாற்று வதற்கு நீதி, சிறைச்சாலை கள் மறுசீரமைப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலைகளில் காணப் படும் இடநெருக்கடிக்கு தீர் வாகஇந்நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது 19

# கிராம உத்தியோகத்தர்கள் பதவிக்கு தகுதியானவர்களின்
### பெயர் விபரங்கள் வெளியீடு

(கொழும்பு)

கிராம உத்தியோகத்தர் களின் வெற்றிடங்களை நிரப்பு வதற்காக நடைபெற்ற போட் டிப் பரீட்சையில் சித்தியடை ந்து நேர்காணலுக்கு தகுதி பெற்றவர்களின் பெயர் விபரங் கள் வெளியிடப்பட்டுள்ளன.

கிராம உத்தியோகத்தர் களை தெரிவு செய்வதற்காக கடந்த வருடம் டிசம்பர் மாதம் இரண்டாம் 19

# இணைய வழி பாதுகாப்புச் சட்டத்தால் மக்களின் உரிமை மீறப்படுகின்றது
### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்



(கொழும்பு)

நாட்டு மக்களின் அரசியல் உரிமைகளை பறித்து, அடக்கு முறைகளை மேற்கொள்ளும் வகையிலேயே இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் நிறை வேற்றப்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித் துள்ளார்.

இணையவழி பாதுகாப்பு சட்ட மூலம் குறித்து ஊட கங்களுக்கு கருத்து 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பணியாளர் தேவை

உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைகளுக்கு ஆட்கள் தேவை.

- சமையல் உதவியாளர்
- துப்பரவு பணியாளர்
- உணவு பரிமாறுவோர்(பெண்கள்)

(18789)

தொடர்புகளுக்கு:

**075 060 9499**

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம், மயிலிட்டியில் கரையோர காப்பட் பாதையிலிருந்து 250m தூரத்தில் 12 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

பரப்பு -18 இலட்சம்

(18795)

தொடர்புகளுக்கு:

**075 521 3533**

## மணமகள் தேவை

யாழ் இந்து கௌரவ 41 வயது மணமகனுக்கு மணமகள் தேவை: சொந்தமாக தொழில் செய்கிறார்.

(18798)

தொடர்புகளுக்கு:

**077 905 8615**

(வைபர் & வாட்ஸ்அப்)

## பணிப் பெண் தேவை

எங்கள் இரண்டு குழந்தைகளையும் பராமரிப்பதற்காக நாங்கள் வீட்டுப் பணிப் பெண்ணைத் தேடுகிறோம். அவர் எங்களுடன் வீட்டில் தங்கியிருக்க வேண்டும்.

(18792)

தொடர்புகளுக்கு

**077 030 6881**


## இணையவழி...

தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். தேர்தல் இடம்பெற வேண்டிய இந்த ஆண்டில் இணையவழி பாதுகாப்பு சட்ட மூலம் நிறைவேற்றப் பட்டமை பொதுமக்கள் மத்தியில் பாரிய அச்சத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த சட்டத்தின் ஊடாக மக்களின் அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளும் மீறப்படுவதாகவும் நியாயமான ஒழுங்கு முறைப் படுத்தல் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் வலியுறுத் தியுள்ளார். (ம-7)

## நிகழ்...

தின் போது உள்

வாங்கப் பட்ட அனைத்து திருத்தங்களும் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளனவா என்பது குறித்து சட்டமா அதிபர் திணைக்களம் விசாரணைகளை நடத்துவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் அறிவித்துள்ளார். கடந்த 24 ஆம் திகதி இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து பல சர்ச்சைகள் எழுந்துள்ள நிலையிலேயே சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். (ம-7)


## றொமேனியா நாட்டில் வேலைவாய்ப்பு

Delivery Boy, மேசன், மாபிள் பொருத்துனர், அலுமினியம் பொருத்துனர் ஆகிய வேலைவாய்ப்புகள் உள்ளன. நேர்முகதேர்வின் பின்னர் குறைந்தளவு முற்பணத்துடன் விண்ணப்பிக்க முடியும். கனடாவிற்கு விசிட் விசா தேவைப்படுபவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்.

**Hybrid International Hub(pvt) ltd Jaffna**

(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்)

**077 815 5920, 021 222 1265, 076 250 0098**

(C-8225)

## கனடா, UK விசாக்கள்

"போலி மற்றும் சில சமூக வலைத்தளங்களின் தவறான வழிகாட்டலில் சிக்காதீர்"



நீண்டகால அனுபவம் கொண்ட ஆலோசனை வல்லுனர்களின் வழிகாட்டல்



- புதிய Visit visa application
- நிராகரிக்கப்பட்ட vist visa மீள் விண்ணப்பித்தல்
- Student visa
- Super visa
- Spouse and family visa
  - ♦ அகதி கோரிக்கை விண்ணப்பம் மற்றும் ஆலோசனை வழிகாட்டல்
  - ♦ ஏற்கனவே visit visa வில் கனடா சென்று உள்ளவருக்கான வழிகாட்டல்

(C-8221)

Whatsapp **+014379299005**
**+447861383633**

## லங்கா மஹால்(PVT) LTD

உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை



- லண்டன் - 925/=
- பிரான்ஸ் - 1790/=
- ஜேர்மனி - 1700/=
- கனடா - 2150/=
- அவுஸ்திரேலியா - 2450/=
- சுவிஸ் - 2050/=
- இந்தியா - 990/=

இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும். நம்பகமான சேவை.

(18805)

இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.

இந்தியா தொடர்புகளுக்கு :

**0091956615671 9**

Western Union MoneyGram Ria Money Transfer

ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.

40,கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.

**077 8393 974**

## காணி விற்பனைக்கு

கொக்குவில் கிழக்கு சம்பியன் ஒழுங்கையில் 1 பரப்பு 13 குழிக் காணி விற்பனைக்கு உண்டு.

(18803)

தொடர்புகளுக்கு:

**076 702 3565**

## விற்பனைக்கு



சலூன், பியூற்றி பார்லருக்கு சுவரில் பொருத்தக்கூடிய

பெரிய கண்ணாடி - 5

சிறிய கண்ணாடி - 4

அளவு 56" X 26" ரூ.8000/=


சிறியது 56" x 17" ரூ.7000/=

(C-8222)

தொடர்புகளுக்கு:

**077 711 0383**


## காணவில்லை



இணுவில் தெற்கு, இணுவிலைச் சேர்ந்த குகதாசன் நீபஜன் (வயது 27) அவர்களை கடந்த 26.01.2024 முதல் காணவில்லை இவர் மஞ்சள் நிற ரீசேட்ஸ் சாம்பல் நிற காற்சட்டையும் அணிந்திருந்தார்.

(18797)

**இவரைக் கண்டவர்கள் தயவுடன் தகவல் தரவும்**

**070 411 6987, 075 332 4337, 077 680 8126**

## கண்ணீர் அஞ்சலி



எமது சங்க உறுப்பினரும் பருத்தித்துறை பிரதேச சபையின் தொழில்நுட்ப உத்தியோகத்தருமாகிய திரு. **ம.சிவக்குமார்** அவர்களின் அன்பு மனைவி

திருமதி

**சுஜந்தினி சிவக்குமார்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(18801)

**இலங்கை தொழில்நுட்பவியல் சேவையாளர் சங்கம் - வடமாகாணம்**

## நன்றிகள்



எமது குலவிளக்கு

**ஸ்ரீமதி சங்கரி மதிரூபக் குருக்கள்**

அவர்களின்

26.01.2024 இல் நடைபெற்ற ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்து கொண்டு அஞ்சலி செலுத்திய அன்பு உள்ளங்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் எம்மோடு உறுதுணையாக நின்று உதவி புரிந்த உறவினர், நண்பர்களுக்கும் மனப்பூர்வமாக நன்றி தெரிவிக்கின்றோம்.

அரசடிப் பிள்ளையார் கோவிலடி,
நாயன்மார்கட்டு, நல்லூர்.

(18790)

இங்ஙனம்
மழலை அம்[illegible] குடும்பத்தினர்

## கண்ணீர் அஞ்சலி

**திரு. துரைராஜா மகாலிங்கம்**

( உரிமையாளர் மகாமினி )



நின்றது
இதய
துடிப்பின்
அதிர்வுகள் மட்டுமல்ல
அது ஒலி அலைகளின் அதிர்வுகளுமே
அதுவே "மகாமினி " மகாலிங்கம்
இவருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை
தெரிவிப்பதோடு ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

சாள்ஸ் சவுண்ட் அன் லைற்
மீசாலை, கொடிகாமம்,
[illegible]பாய்.

(18791)

சாள்ஸ் ரோன்,
மெகாபவர்,
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மணிவிழாவும் சேவைநலன் பாராட்டும்

28.01.2024



திரு. காசிநாதர் சுகுமார்
BA(Hons),PGDE,MEd
(இணைப்பாளர், கல்விமாணிப் பட்டக் கற்கைநெறி, முகாமையாளர், ஆசிரியர் வாண்மை விருத்தி நிலையம், முல்லைத்தீவு)

எமது கல்வி வலயத்தில் நான்கு தசாப்தங்களாக கல்விப்பணி புரிந்து நூற்றுக்கணக்கான பட்டதாரிகளை உருவாக்கிய சுகுமார் சேர் அவர்களின் சேவையை பாராட்டுவதோடு அவருக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் எல்லா நலன்களும் கிடைக்க பிரார்த்திக்கின்றோம்.

வாழ்த்துவோர் :
கல்விமாணிப்பட்டக் கற்கைநெறி ஆசிரிய மாணவர்கள், விரிவுரையாளர்கள்

Best Wishes!

(C-8227)


## ரூ.1.5 பில்லியன் நிதியினை திறைசேரிக்கு வழங்கிய லிட்ரோ



லிட்ரோ எரிவாயு நிறுவனம் 2023ஆம் ஆண்டில் இலாபமாகப் பெற்றுக் கொண்ட மேலும் 1.5 பில்லியன் ரூபாய் நிதியை திறைசேரிக்கு வழங்கியது.

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்திடம் இதற்கான காசோலை நேற்று முன்தினம் ஜனாதிபதி அலுவலகத்தில் கையளிக்கப்பட்டது. குறித்த காசோலையை லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கவிடம் உத்தியோகபூர்வமாக கையளித்தார். லிட்ரோ நிறுவனம் 2023 ஆம் ஆண்டில் மாத்திரம் 3 பில்லியன் ரூபாவை இலாபத் தொகையாக திறைசேரிக்கு அனுப்பியுள்ளதாக முதித பீரிஸ் மேலும் தெரிவித்தார். (6)


# மணிவிழா வாழ்த்து



28.01.2024 திருவாளர் காசிநாதர் சுகுமார்
B.A(Hons), Dip in Edu., MEd.
முகாமையாளர், ஆசிரியர் வாண்மை விருத்திநிலையம், வலயக்கல்விப் பணிமனை, முல்லைத்தீவு.

அயராது ஆற்றிய சேவைக்கு இறை ஆசி உண்டு. அடுத்து வரும் நாட்களில் நற்பிள்ளையுடன்-உற்ற அன்பு மனையாளும் நீங்களும் ஏற்றம் காண்பது உறுதி ஆண்டவன் அருள் நிரம்பி சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றோம்.

வலயக்கல்விப் பணிப்பாளர்,
ஊழியர் நலன்புரிச்சங்கம்,
வலயக்கல்விப் பணிமனை-முல்லைத்தீவு.

(8796)



CELEBRATING 25 YEARS OF TRUST & EXCELLENCE
UGC RECOGNIZED

BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

# A/L இன் பின்னர்!
# HND
## பிரித்தானிய
உயர் தேசிய டிப்ளோமா
மற்றும் பட்டப்படிப்புக்களை
யாழ்ப்பாணத்தில் தொடருங்கள்!

பதிவுகள் ஆரம்பம்



Foundation Courses After O/L ▶ BTEC HNDs After A/L | BSc (Hons) LLB (Hons) | MBA | MSc

MANAGEMENT | COMPUTING | APPLIED SCIENCES | LAW
QUANTITY SURVEYING | ENGINEERING

BRITISH COUNCIL | Pearson | BTEC | SOLENT UNIVERSITY SOUTHAMPTON | OXFORD BROOKES UNIVERSITY

077 684 6261

(C-8220)

021 221 9910 "Building Careers Transforming Lives" NO 16, Point Pedro Road, Jaffna www.bcas.lk


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# விளையாட்டுச் செய்திகள்

# யாழின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி முடிவுகள்


நவாலி சென்பீற்றர்ஸ் | பொலிகை ஒற்றுமை

யாழின் நாயகன் உதைபந்தாட்ட தொடரில் நவாலி சென்பீற்றர்ஸ் மற்றும் பொலிகை ஒற்றுமை அணிகள் அடுத்த சுற்றுக்கு தகுதி பெற்றுள் ளன.


வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளை யாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை நடைபெற்ற முதலாவது போட்டியில் நவாலி சென்பீற்றர்ஸ் அணியை எதிர்த்து யாழ். ஜேம்ஸ் அணி மோதியது.

தமது அபாரமான ஆட்டத்தை வெளிப்படுத்திய நவாலி சென்பீற்றர்ஸ் அணி 4:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

அடுத்து நடைபெற்ற போட்டியில் பொலிகை ஒற்றுமை அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது.

இதில் பொலிகை ஒற்றுமை அணி 7:4 என்ற கோல் கணக்கில் பெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது. (5-6)

# சச்சின் சாதனையை முறியடித்த ஜோரூட்




இந்தியா, இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் டெஸ்ட் போட்டி ஐதராபாத்தில் கடந்த வியாழக்கிழமை தொடங்கியது. டாஸ் வென்ற இங்கிலாந்து கப்டன் பென் ஸ்டோக்ஸ் பட்டிங் தேர்வு செய்தார்.

அதன்படி, முதலில் ஆடிய இங்கிலாந்து முதல் இன்னிங்சில் 246 ரன்களுக்கு ஓல் அவுட்டானது. பென் ஸ்டோக்ஸ் பொறுப்புடன் ஆடி அரை சதம் கடந்தார்.

அவர் 70 ரன்னில் அவுட்டானார்.

ஜோ ரூட் 29 ரன்னில் ஆட்ட மிழந்தார்.

இந்தியா சார்பில் ஜடேஜா, அஸ்வின் தலா 3 விக்கெட்டும் அக்சர் படேல், பும்ரா தலா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இந்நிலையில், இந்தியா மற்றும் இங்கிலாந்து அணிகள் மோதிய டெஸ்ட் போட்டிக ளில் அதிக ரன்கள் அடித்த வீரர் என்ற சச்சின் டெண்டு ல்கரின் சாதனையை ஜோ ரூட் முறியடித்தார்.

ஜோ ரூட் இது வரை 2,555 ரன்கள் எடுத்து ள்ளார். இவருக்கு அடுத்த இடத்தில் சச்சின் டெண்டுல்கர் 2,535 ரன்னும் சுனில் கவாஸ்கர் 2,483 ரன்னும் எடுத்துள்ளனர். (நி-5-6)

## உதைபந்தாட்ட சுற்றுப்போட்டிகள்

வலிகாமம் உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் தெல்லிப்பழை நாமகள் விளை யாட்டுக்கழகம் மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட "யாழின் நாயகன்" கால்பந்தாட்ட சுற்றுப்போட்டி தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்று வருகின்ற இந்நிலையில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு குறிஞ்சிக்குமரன் அணியை எதிர்த்து யாழ் ஐக்கியம் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு கொலின்ஸ் அணியை எதிர்த்து காளியம்பாள் அணியும் மோதவுள்ளன.

அதேவேளை வடமாகாண உடற்கல்வி டிப் ளோமா ஆசிரியர் சங்கம் வலிகாமம் உதை பந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட இவ்வருடத்தின் முதலாவது மாகாண தொடர் உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வருகின்ற இந்நிலையில் இன்று பிற்பகல் 3.45 மணிக்கு வடமராட்சி சிவானந்தா அணியை எதிர்த்து ஊரெழு றோயல் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு யங்ஹென்றீசியன் அணியை எதிர்த்து உருத்திரபுரம் அணியும் மோதவுள்ளன. (6-90)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடம்புரண்ட கப்ரக வண்டி
## திருமலையில் சம்பவம்



(கொழும்பு)

திருகோணமலை கந்தளாய் - சேருவில வீதியில் உள்ள பேராறு பகுதியில் கப் ரக வண்டி ஒன்று கால்வாயில் தடம் புரண்டு விபத்து ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் நேற்று காலை இடம்பெற்றுள்ளது. பின்னர், அப் பகுதி மக்கள் கயிறு மூலம் ஜீப்பை கரைக்கு கொண்டு வந்ததாக தெரிவிக்கப்படுகிறது.

அதேவேளை குறித்த விபத்தில் யாருக்கும் காயம் ஏற்ப டவில்லை என தெரி விக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கந்தளாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6)


## வேலையாள் தேவை

யாழ்.நகரில் உள்ள சில்வர் கடை ஒன்றிற்கு ஆண் வேலை யாட்கள் தேவை.

18-30 வயதிற்குட்பட்டவர்கள்.

(18787)

தொடர்புகளுக்கு
075 302 5663


# சுதந்திர தின நிகழ்விற்காக கொழும்பில் விசேட போக்குவரத்து நடைமுறை

(கொழும்பு)

இலங்கையின் 76 ஆவது சுதந்திர தினக் கொண்டாட்டத்தை முன்னிட்டு கொழும்பில் நாளை திங்கட்கிழமை 29 ஆம் திகதி முதல் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை விசேட போக்குவரத்துத் திட்டம் நடை முறைப்படுத்தப் படவுள்ளதாக போக்குவரத்து பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பொலிஸ் ஊடகப் பிரிவில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் இந்திக்க ஹப்புகொட இதனைத் தெரிவித்தார்.

இதன்படி நாளை முதல் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி வரை காலி வீதி, கொள்ளுப்பிட்டி சந்தியில் இருந்து காலி முகத்திடல் வரையும் செரமிக் சந்தி தொடக்கம் காலிமுகத்திடல் வரையும் காலை 6 மணி முதல் 8.30 மணி வரையும் மூடப்படும்.

இதேவேளை குறித்த நாட்களில் முற்பகல் 11 மணி முதல் நண்பகல் 12 மணி வரையும் குறித்த வீதி மூடப்படவுள்ளது.

அத்துடன் பெப்ரவரி மாதம் 3 ஆம் திகதி பிற்பகல் 2 மணி முதல் சுதந்திர தினம் நிறை வடையும் வரையிலும் மேற் குறிப்பிட்ட வீதி மூடப்படும் என போக்குவரத்து பிரிவிற்கு பொறுப்பான பிரதி பொலிஸ்மா அதிபர் தெரிவித்துள்ளார். (6)

# பாவனைக்கு உதவாத
## 98 கொள்கலன்கள் தரையிறக்கம்

(கொழும்பு)

சீஷெல்ஸில் இருந்து தாய்லாந்து நோக்கி பயணித்த கப்பலில் இருந்து பாவனைக்கு பொருத்தமற்ற மீன்கள் அடங்கிய 98 கொள்கலன்கள் தரையிறக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.


கரிம உரங்களை தயாரிப்பதாகவே இந்த கொள்கலன்கள் தரையிறக்கப்படுவதற்கு முன்னதாக அனுமதி கோரப்பட்டிருந்ததாக கோபா எனப்படும் அரசாங்க கணக்கு குழு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் குறித்த மீன்கள் அடங்கிய 98 கொள்கலன்களும் நாட்டில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், மீன் கழிவுகளுக்காகவே இந்த அனுமதிப் பத்திரம் வழங்கப்பட்டுள்ளதாக இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டாளர் நாயகம் டி.டி உபுல்மலி பிரேமதிலக்க மஹத்மோயா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொள்வதற்காக எதிர்வரும் மார்ச் மாதம் 5ஆம் திகதி அனைத்து அரச நிறுவனங்களுக்கும் அழைப்பு விடுக்கப்படும் என அரச கணக்குகள் தொடர்பான குழுவின் தலைவர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார். (6)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியை
திருமதி. **பாலரூபினி ஜனார்த்தனன்**
அவர்களின் அன்புத் தந்தை

அமரர். **மாணிக்கம் செல்வரத்தினம்**


அவர்கள் காலமான செய்தியறிந்து
துயரடைகின்றோம். அன்னாரின்
இழப்பால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(18788)

**பாடசாலைச் சமூகம், யா/பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி.**

## கண்ணீர் அஞ்சலி

மலர்வு- 02.06.1937
உதிர்வு- 15.01.2024



அரசம்புலம் பொலிகண்டி மேற்கு,
வல்வெட்டித்துறையை பிறப்பிடமாகவும் கனடாவை
வசிப்பிடமாகவும் கொண்ட எமது அன்புக்குரிய மைத்துனர்
**செல்லன் பாலச்சந்திரன்** அவர்களின் அன்புத் தாயார்,
திருமதி

**செல்லக்கண்டு செல்லன்**

அவர்கள் காலமான செய்தியறிந்து
ஆழ்ந்த துயரடைகின்றோம்.
அன்னாரின் இழப்பினால் துயரடைந்துள்ள
குடும்பத்தினருக்கு எமது
அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
அவரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

(18730)

**பிரிவால் துயருறும் பீற்றர் குடும்பம், புலோலி, பருத்தித்துறை.**

# இராசிபலன்

28.01.2024
தை 14, ஞாயிற்றுக்கிழமை
திருதியை பின்னிரவு 5.37மணிவரை
மகம் பிற்பகல் 3.46 மணிவரை

சுபநேரம் -9.36-11.06மணிவரை
இராகுகாலம்-5.06-6.36மணிவரை

சந்திராஷ்டமம்- பூராடம், உத்தராடம்

**வளவன்**

**மேஷம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், அடிப்படை வசதி வாய்ப்புக்களை பெருக்கி கொள்ள முற்படுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.

**ரிஷபம்** — பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் செய்திகள் வந்து சேரலாம் விருந்தினர் வருகையுண்டு, வழிபாடு காரிய வெற்றி தரும்

**மிதுனம்** — சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், போசன சுகமுண்டு, நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**கடகம்** — குடும்பத்தார் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம் , புதிய பொருட் சேர்க்கையுண்டு, நன்மைகள் நடைபெறும் நாள், வாக்கு மேன்மையுண்டு

**சிம்மம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் அனுகூலம் தரும், வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

**கன்னி** — அலைச்சல்கள் காணப்பட்டாலும் ஆதாயம் பெறுவீர்கள், ரோகபயமுண்டு , மனச்சஞ்சலங்கள் சற்று அதிகரிக்கலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**துலாம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும் நாள், பொருளாதார நிலை உயர வழி வகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்,.

**விருச்சிகம்** — தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், போசன சுகமுண்டு, கௌரவமான நாள்.

**தனுசு** — உதாசீனப்படுத்தியவர்கள் உதவி கேட்டு வரலாம், அரை குறையாக இருந்த பணிகளை மீதியும் தொடர்வீர்கள், வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும்.

**மகரம்** — மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், குடும்பத்தினரிடையே கோபமாகப் பேசிவிட்டு பின்னர் மனம் வருந்தும் நிலை ஏற்படலாம், கௌரவக்குறைவான நாள்.

**கும்பம்** — களஸ்திர நன்மையுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு, பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**மீனம்** — உடல் நலனில் ஏற்பட்ட பாதிப்புகள் அகலும், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**அடக்கமற்றவனுக்கு அழகான வார்த்தை அடங்காது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பல்கலையில் ஆரம்பமான சட்ட மாநாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண சட்ட மாநாடு நேற்று சனிக்கிழமை யாழ்.பல்கலைக்கழக மருத்துவ பீட கலையரங்கத்தில் ஆரம்ப மானது.



ஆரம்ப நிகழ்வில் சட்டமா அதிபர் சஞ்சய் ராஜரட்ணம், ஐக்கிய நாடுகளின் முன்னாள் நேருதவிச் செயலாளரும் சிறுவர் மற்றும் ஆயுத முரண்பாடு தொடர்பான செயலாளர் நாயகத்தின் விசேட பிரதிநிதியுமான கலாநிதி ராதிகா குமாரசுவாமி, ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி கனகேஸ்வரன், சிங்கப்பூர் தேசிய பல்கலைக்கழகத்தின் வாழ்நாள் பேராசிரியர் சொர்ணராஜா, கலாநிதி.ஆறு.திருமுருகன், யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பீடாதிபதி கலாநிதி சி.ரகுராம், யாழ். பல்கலைக்கழக சட்டத்துறைத் தலைவர் கோசலை மதன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இம்மாநாட்டின் நோக்கங்களாக சட்டப் பரப்பில் அதிகம் பேசப்படாத விடயங்களைப் பேசுதல், பன்மைத்துவ ஆய்வை ஊக்குவித்தல், அவ்வகை ஆய்வு முயற்சிகளை கலந்துரையாடுவதற்கான களமொன்றை அமைத்தல், சட்டப் புலமையாளர்கள், ஆய்வாளர்கள் ஆகியோரையும் அவர்களின் ஆய்வுச் சிந்தனைகளையும் ஒன்றிணைத்தல், எழுத்திலுள்ள சட்டத்திற்கும் அதன் செயற்பாட்டிற்குமான இடைவெளியைக் குறைத்தல், சட்ட மாணவர்களுக்கு சட்டத் துறை சார் ஆய்வுச் சிந்தனைகளை அறிமுகப்படுத்துதல் மற்றும் துறைசார் நிபுணர்களுடனான வலையமைப்பை ஏற்படுத்தல் ஆகிய பல்வேறு நோக்கங்களைக் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

"நெருக்கடிகளுக்கூடான வழிகள்" என்னும் தொனிப் பொருளில் யாழ். பல்கலைக்கழக சட்டத்துறை, இந்தியாவின் சுரானா மற்றும் சுரானா சர்வதேச வழக்கறிஞர்கள் நிறுவனத்துடன் இணைந்து நேற்று ஆரம்பமான நிலையில் இன்றும் இடம்பெறவுள்ளது. (5-6-33)

## வேலணைச்சித்தர்

# பிடிஅரிசி பிள்ளையானின் திருவுருவச்சிலை நாளை திறப்பு

(யாழ்ப்பாணம்)

சித்தர் சிவகுல திலகம் திருத்தொண்டன் பிடி அரிசி பிள்ளையான் திருவுருவச் சிலை திரை நீக்கமும் சிறப்பு மலர் வெளியீடும் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு வேலணை நேதாஜி சனசமூக நிலைய முன்றலில் சனசமூக நிலையத் தலைவர் நா.சுந்தரபவான் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் அ. சிவபால சுந்தரன், சிறப்பு விருந்தினராக வேலணை பிரதேச செயலாளர் கை.சிவகரன், கௌரவ விருந்தினராக புங்குடுதீவு சர்வோதய இணைப்பாளர் செல்வி.பொன். ஜமுனாதேவி ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதோடு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் பிரதமகுரு ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச் சாரிய சுவாமிகள் திரவுருவச் சிலையை திரை நீக்கம் செய்யவுள்ளார். (5-6)

# மாவட்ட பண்பாட்டு விழா

(யாழ்ப்பாணம்)

வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பண்பாட்டுப் பேரவையும் மாவட்ட செயலகமும் இணைந்து நடத்தும் மாவட்ட பண்பாட்டு விழா நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை பி.ப 2 மணிக்கு சேர் பொன் இராமநாதன் வீதியிலுள்ள ராஜா கிறீம் ஹவுஸின் சரஸ்வதி மண்டபத்தில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரும் பண்பாட்டுப் பேரவைத் தலை வருமான அ.சிவபால சுந்தரன் தலைமையில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் திருவாட்டி.பீ. எஸ். எம். சார்ள்ஸ், சிறப்பு விருந்தினர்களாக வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானம் மற்றும் சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி.செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகன், கௌரவ விருந்தினர்களாக வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பிரதிப் பணிப்பாளர் திருவாட்டி. லாகினி நிரூபராஜ், நல்லூர் கனகரத்தினம் சட்டநாதன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (5-6)

# விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் சுத்திகரிப்பாளர்கள் பணிக்கான வெற்றிடங்கள் அதிகமாக காணப்படுகின்றன. மேலும் மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களில் சுத்திகரிப்பு பணியினை மேற் கொண்டு வரும் நிறுவனங்களிலும் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

எனவே இச்சுத்திகரிப்புப் பணியில் இணையவிருக்கின்ற பணியாளர்களுக்கு சுத்திகரிப்பு பணியினை திறம்படவும் ஒழுங்குமுறையாகவும் மேற்கொள்வதற்கு ஏற்ற வகையில் அவர்களுக்கான பயிற்சிகளை மேற்படி சுத்திகரிப்பு பணி நிறுவனங்கள் ஊடாக வழங்கி அந் நிறுவனங்களில் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொடுப்பதற்கான நேர்முகத்தேர்வு எதிர்வரும் பெப்ரவரி மாதம் நடைபெறவுள்ளது.

எனவே 60 வயதிற்கு உட்பட்ட ஆர்வமுள்ள இருபாலாரும் இத ற்காக பதிவு செய்துகொள்ள முடியும் என்பதால் மாவட்டச் செயலகத்திலுள்ள தொழில் நிலையத்திலோ அல்லது அரு கிலுள்ள தங்கள் பிரதேச செயலக மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்கள உத்தியோகத்தரிடமோ எதிர்வரும் 31 ஆம் திகதிஇற்கு முன்பதாக தங்களை பதிவு செய்து கொள்ளுமாறு யாழ். மாவட்ட அரச அதிபர் அ. சிவபாலசுந்தரன் அறிவித்துள்ளார். (6)




சர்வதேச ஈரநில தினம் பெப்ரவரி மாதம் 2ஆம் திகதி கொண்டாடப்படவுள்ள நிலையில் அதனை முன்னிட்டு எதிர்காலத்திற்கான சுற்றுச்சூழல் கழகமும் சிறகுகள் அமையமும் இணைந்து பாடசாலை மாணவர்களுக்கானகளப்பயணம் நேற்று செம்மணி பகுதியில் இடம்பெற்றது. (படம்-சிவசாந்தன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | நெல்லியடி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 800 | 600 | 600 | 700 | 780 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 | 240 | 240 |
| பச்சைமிளகாய் | 1400 | 1000 | 1000 | 1200 | 1110 |
| தக்காளி | 600 | 550 | 600 | 800 | 750 |
| மரவள்ளிக்கிழங்கு | 150 | 120 | 150 | 150 | 140 |
| கோவா | 700 | 500 | 600 | 800 | 750 |
| கரட் | 1400 | 800 | 1000 | 2000 | 2000 |
| பூசணி | 180 | 300 | 150 | 200 | 120 |
| புடோல் | 300 | 250 | 300 | 400 | 250 |
| வாழைக்காய் | 250 | 250 | 200 | 300 | 250 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 450 | 400 | 300 |
| பெரிய வெங்காயம் | 400 | 380 | 400 | 400 | 440 |
| பாகற்காய் | 800 | 700 | 800 | 1000 | 500 |
| வெண்டக்காய் | 450 | 400 | 350 | 500 | 585 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 | 120 |
| பயற்றங்காய் | 800 | 700 | 800 | 800 | 720 |
| லீக்ஸ் | 450 | 500 | 600 | 800 | 700 |
| பீற்றூட் | 800 | 500 | 800 | 800 | 750 |
| கறிமிளகாய் | 650 | 800 | 800 | 1000 | 1100 |
| முருங்கைக்காய் | — | — | — | 3000 | 2200 |
| போஞ்சி | 700 | 600 | 600 | 800 | 500 |
| கத்தரிதம்புள்ள | 750 | 400 | 700 | 600 | — |
| கீரை - 1 பிடி | 100 | 120 | 120 | 150 | 80 |
| தேசிக்காய் | 200 | 200 | 350 | 200 | 255 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 100 | 100 | 70-100 | 105 |
| இராசவள்ளி | 450 | 500 | 450 | 600 | 400 |
| வெங்காயப்பூ | 450 | 300 | 500 | 600 | 370 |
| முள்ளங்கி | 200 | 200 | 300 | 300 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 120 | 140 | 60 | 140 |
| வல்லாரை | 80 | 250 | 50 | 80 | 60 |
| [illegible] | 100 | 150 | 100 | 200 | 100 |

# வட்டு. முருகமூர்த்தி பாலஸ்தான கும்பாபிஷேகம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை துணைவி தெண்டப்பிராய் முருகமூர்த்தி தேவஸ்தான பாலஸ்தாபன கும்பாபிஷேக கிரிகைகள் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து மூன்று தினங்கள் இடம் பெற உள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலை 5 மணிக்கு விசேட பூஜைகளைத் தொடர்ந்து காலை 6.33 மணி தொடக்கம் காலை 7.22 மணிவரையுள்ள சுப முகூர்த்த வேளையில் பாலஸ்தாபன கும் பாபிஷேகம் இடம்பெற உள்ளது என ஆலயப் பரிபாலன சபையினர் அறிவித்துள்ளனர். (6)

# நினைவுதினம்

(யாழ்ப்பாணம்)

குரும்பசிட்டி கிராம அபிவிருத்திச் சங்கம் நடத்தும் அமரர். ஆ.சி. நடராஜாவின் 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வும் மாணவர் கல்வி ஊக்குவிப்பும் இன்று காலை 9.30 மணிக்கு குரும்பசிட்டி கலைஞானி கலாசார மண்டபத்தில் குரும்பசிட்டி கிராம அபிவிருத்தி சங்கத் தலைவர் பொ.தங்கராசா தலைமையில் இடம் பெறவுள்ளது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலம்புரியின் வாரமலர்
# சங்குநாதம்
நாதம் 425
Viber 076 636 3378



# வாழ்நாளில் ஒருமுறையாவது தரிசித்துவிட வேண்டிய அயோத்தி!

சுற்றமெல்லாம் பின் தொடரத் தொல் கானமடைந்தவனே!
அற்றவர்கட் கருமருந்தே! அயோத்தி நகர்க் கதிபதியே!
கற்றவர்கள் தாம் வாழும் கணபுரத்தென் கருமணியே!
சிற்றவை தன் சொல் கொண்ட சீராமா! தாலேலோ"

அயோத்தி ராமனைக் குழந்தையாகவே கருதி, ஆழ்வார் குலசேகரப் பெருமாள் அன்றே தாலாட்டுப் பாடிவிட்டார். ஆனாலும், சுமார் 500 ஆண்டுகால சர்ச்சைகளுக்குப் பிறகு இன்று ஸ்ரீராமர் குழந்தை வடிவாக அயோத்தி ஆலயத்தில் பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளார். நாட்டிலுள்ள ராம பக்தர்கள் கொண்டாட்டத்தில் குதூகலிக்கின்றனர். அப்படி என்ன அயோத்திக்கு மட்டும் தனிச் சிறப்பு?

திருமாலின் ஏழாவது அவதாரமான ஸ்ரீராமர் பிறந்த புண்ணிய இடம் என்பதால் மட்டுமல்ல, தனிப் புத்தகமே போடக்கூடிய பல சிறப்புகள் வாய்ந்த இடம் அயோத்தி. அவற்றில் சிலவற்றைக் காண்போம்.

பெரியாழ்வார், குலசேகராழ்வார், நம்மாழ்வார், தொண்டரடிப் பொடியாழ்வார், திருமங்கையாழ்வார் என ஐந்து ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்விக்கப்பட்ட திருத்தலம் அயோத்தி. 13 பாசுரங்கள் 'அயோத்திக்கு உண்டு. அதிலும் ஸ்ரீராமனைத் தாலாட்டி முழு ராமாயணத்தைப் பத்தே பாடல்களில் எழுதியவர் குலசேகராழ்வார். கிருதயுகம், திரேதா யுகம், துவாபரயுகம், கலியுகம் என நான்கு யுகங்களிலும் புகழைப் பெற்ற ஒரே நகரம் அயோத்தி.

அயுத்தா என்றால், போரில்லாத என்று பொருள். அதுவே இந்நகருக்குப் பெயரானது. கோசல நாட்டின் தலைநகரமான அயோத்தி, சரயு நதிக்கரையில் அமைந்துள்ளது. 120 மைல் நீளமும் 30 மைல் அகலமும் கொண்டது இந்நகரம் என்கிறார் வால்மீகி. கம்பராமாயணம் அயோத்தியின் அழகைப் பலவாறு வியந்து வர்ணிக்கிறது.

சகல ஜீவராசிகளையும் ரட்சிக்கவும் துஷ்டர்களை தண்டிக்கவும் திருமால் ஸ்ரீராம அவதாரம் எடுக்க விரும்பினார். அதனால் வைகுண்டத்தின் திருவிடமான பத்மபீடப் பகுதியை அயோத்தியாக்கி, விவஸ்வான் மகன் மனுவிடம் அளித்தார். அவரும் அதை சரயு நதிக்கரையில் வைத்து சுற்றிலும் கோசல நாட்டை நிர்மாணித்தார் என்கிறது புராணம்.


திருமால் ராமராகவும், திருமகள் சீதையா கவும் பூமாதேவி வேதவதியாகவும் நீளாதேவி சரயுவாகவும், ஆதிசேஷன் சங்கு, சக்கரம் போன்றவை ராமபிரானின் சகோதரர்களாகவும் அயோத்திக்கு வந்தனர். வைகுந்தமே அயோத்திக்கு வந்ததால் இது "மண்ணுலக வைகுந்தம்" எனப் பட்டது. இஷ்வாகு குலத்தவரால் கோசல நாடு ஆளப்பட்டு பிரசித்தி பெற்றது. அந்தக் குலத்தில் 68ஆவது தலைமுறையாகப் பிறந்தவர் ஸ்ரீராமர்.

பிரம்மனால் தவமிருந்து பெறப்பட்ட ஸ்ரீரங்கநாதர் விக்ரகமே அயோத்தியின் காவல் தெய்வமாகவும் இஷ்வாகு வம்சத்தவரின் குலதெய்வமாகவும் ஆனது. பிரம்மாவின் மகன் மரீசீ, மரீசீயின் மகன் கஷ்யபர், கஷ்யபரின் மகன் விவஸ்வான், அவரின் மகன் மனு எனத் தொடங்கி ஸ்ரீராமரின் காலம் வரை ஸ்ரீரங்கநாதரே குலதெய்வமாக வழிபடப்பட்டார். அந்த விக்கிரகமே பிறகு விபீஷணருக்கு அளிக்கப்பட்டு, ஸ்ரீரங்கத்தில் நிலையானது.

ராமாயண சம்பவங்கள் நடைபெற்ற இடங்கள், அயோத்தியின் பரந்த பகுதிக்குள் இன்றும் உள்ளன. அயோத்தியின் சமதா பகுதி ராமாயணத்தின் தொடக்கப் பகுதியான, பெற்றோரைத் தூளியில் வைத்துச் சுமந்த சிரவணன் வாழ்ந்த இடம் என்கிறார்கள். சர்வாரா என்ற பகுதியை அறியாமல் தசரதர் அம்பெறிய, சிரவணன் மாண்ட இடம் என்கிறார்கள். ஸ்ரீராமர்-சீதை வசித்த அரண்மனையான கனக பவனம், ஸ்ரீராமர் வளர்ந்த தசரத பவன், வால்மீகி ஆசிரமம் இருந்த வால்மீகி பவன், தசரதருக்காக ஸ்ரீராமர் பித்ரு காரியம் செய்த சரயு நதி சிவன் கோயில், சீதாதேவி பூஜித்த துளசி மாடம், ஸ்ரீராமர் பட்டாபிஷேக மண்டபம், ஸ்ரீராமர் நடத்திய அஸ்வமேதயாகத் திடல், ஸ்ரீராமர் துறவறம் ஏற்ற இடம், லகட்மண்டி என்ற தசரதர் புத்திர காமேஷ்டி யாகம் செய்த பகுதி, வசிஷ்டர் ஆஸ்ரமம், பரதன் அயோத்திக்கு வெளியே தங்கியிருந்து 14 ஆண்டுகள் ஸ்ரீராமரின் பாதுகைகளைப் போற்றிக் காத்திருந்த நந்திகிராமம், தசரதர் புனித நீராடிய ராஜ்காட், 108 புனித குண்டங்கள் என அயோத்தி எங்கிலுமே ஸ்ரீராமரின் அடையாளங்கள் குடிகொண்டிருக்கின்றன.

வேதங்கள் திருமாலின் ஏழு அங்கங்களாக ஏழு நகரங்களைக் குறிக்கின்றன. அதில் அயோத்தி-சிரசு, மதுரா-கழுத்து, காசி-நாசி, மாயா-மார்பு, துவாரகா-நாபி, காஞ்சி- இடுப்பு, அவந்திகா- பாதம் என்கிறது. காசியில் இறந்தால் முக்தி என்பதுபோல வடநாட்டில் அயோத்தியாவில் பிறந்தால் முக்தி என் கிறார்கள். இது குப்தர்கள் காலத்தே புத்த, ஜைன சமயத்தவர்களுக்கும் புனித நகரமாக விளங்கியது.

அயோத்தியின் தனிச் சிறப்பாக விளங்கும் அனுமன் காடி அல்லது அனுமன் கர்கி எனும்




அனுமன் இல்லம் ஸ்ரீராமர் கோயிலுக்கு எதிரே உள்ளது. இங்கே நித்ய சிரஞ்சீவியான அனுமன் இன்றும் அரூபமாக வாழ்ந்து ராமநாமம் ஜபித்துவருகிறார் என்ற நம்பிக்கை உள்ளது. வானரங்கள் அதிகம் சூழ்ந்துள்ள இந்த ஆலயத்தில் கருவறையில் குழந்தை அனுமனாக தாய் அஞ்சனையின் மடியில் அமர்ந்தவாறு காட்சி தருகிறார். அயோத் திக்குச் செல்பவர்கள் முதலில் இவரை தரிசித் துவிட்டே ஸ்ரீராமரை தரிசிக்க வேண்டும் என்பது ஐதீகம்.

ஸ்ரீராம அவதார நோக்கம் நிறைவு பெற்றதும் எல்லோரும் வைகுந்தம் செல்லத் தயாராகையில், ஸ்ரீராமர் அழைத்தும் வைகுந்தம் வர அனுமன் மறுத்துவிட்டாராம். ஸ்ரீராமர் இருக்கும் இடமே எனக்கு அயோத்தி என்று இங்கேயே ஒரு மலைக்குன்றின் குகையில் நித்ய சிரஞ்சீவியாக வாழத் தொடங்கிவிட்டாராம்.

(22.01.2024) மதியம் 12:20 முதல் 12:30 மணிக்குள் ஸ்ரீராமர் திருவுருவம் அயோத்தியில் பிராணப் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஆலயம் திறக்கப்பட்டது. 2.7 ஏக்கரில் 57,400 சதுர அடியில் மூன்று அடுக்குகளும், ஐந்து வட்ட வடிவ மண்டபங்களும், ஷிகார் எனும் கோபுரமும் கொண்டு அமைந்துள்ளது ராமர் கோயில். 360 தூண்கள் கோயிலைத் தாங்கியிருக்கும் வகையில் நாகர பாணி கட்டடக் கலையால் வடிவமைக்கப்பட்டுள்ளது. ராஜஸ்தானின் பான்ஸி மலைகளிலிருந்து சலவைக் கற்கள் கொண்டு வரப்பட்டு கோயில் நிர்மாணிக்கப்பட்டது.


அயோத்தியாவை நினைத்தாலும் புகழ்ந்தாலும் பிறவிப்பயன் அடைந்து மோட்சம் பெறுவார்கள் என்கிறது ராமாயணம். அயோத்திக்குச் செல்ல விரும்பினாலும், செல்பவர்களுக்கு உதவி செய்தாலும்கூட சென்று வந்த பலன் உண்டு என்கிறார்கள் பெரியோர்கள். அயோத்திக்குச் சென்று சரயுவில் நீராடி ஸ்ரீராமனை வணங்குபவர்களுக்கு ஜென்ம ஜென்மமாய் செய்த பாவங்கள் தொலைந்து பிறப்பிலா மோட்சம் கிட்டும் என்கின்றன புனித நூல்கள்.



ஜூனியர்விகடன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு



## ஆலய உள்வீதியில் வைத்து போனில் படமெடுக்கும் அபத்தம்

**வா**த்தியார் வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்களில் பண்டிதர் பரமலிங்கத்தை தவிர மற்றெல்லோரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற அனைவரும் எழுந்து நின்று இறைவணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து விதானையார் விசுவலிங்கம் எழுந்தார்.

ஆங்கில ஆசிரியராக இருந்து எமது மாணவர் சமுகத்திற்கு ஆங்கிலத்தைப் போதித்த ஹரி மாஸ்ரர் என்று நாம் அன்பாக அழைக்கின்ற மருதலிங்கம் அரிதாசன் அவர்கள் காலமாகி விட்டார்.

அவருக்க இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்துவோம் எனக் கூற, அனைவரும் எழுந்து நின்று இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க கங்காணி கார்த்திகேயன் குரல் கொடுத்தார்.

**கங்காணி:-** அது சரி எப்பவும் ஆலடிக்கு முதலில வாற பண்டிதர் ஐயாவை இன்னமும் காணவில்லை.என்ன சங்கதி. இப்படி கங்காணி கேட்க, அந்நேரம் பார்த்து பண்டிதர் பரமலிங்கம் ஆலடிக்கு வந்து சேர்ந்தார்.

பண்டிதருக்கு ஆயுள் நூறு. அது சரி பண்டிதர் ஐயா, இண்டைக்கு என்ன சுணக்கம் மூப்பர் விசாரித்தார்.

**பண்டிதர்:-** நயினாதீவு நாகபூசணி அம்மன்ர மகா கும்பாபிசேகத்திற்குப் போனனான்.மிக அற்புதமாகக் கும்பாபிஷேகம் நடந்தது.

அதிலும் எண்ணெய்க்காப்புச் சாத்துவதற்கு ஏகப்பட்ட அடியார்கள் வந்திருந்தினம்.

மகாகும்பாபிஷேக தினத்தன்று படகுச் சேவை இலவசமாக நடத்தப்பட்டது.

உண்மையில குறிகட்டுவான்- நயினாதீவு படகுச் சேவை வழங்குபவர்களைப் பாராட்ட வேணும்.

டீசல் விலை உச்சமாக இருக்கிற போதிலும் நயினாதீவு நாகபூசணி அம்மனிட்ட வாற பக்தர்களிட்டக் கட்டணம் அறவிடாமல் கடல்வழி போக்குவரத்துச் சேவையை இலவசமாக வழங்குவது எனத் தீர்மானித்து, அதனைச் சிறப்பாக நடைமுறைப்படுத்திய படகுச் சேவை உரிமையாளர்களையும் அதன் பணியாளர்களையும் பாராட்டுவம்.

இவ்வாறு பண்டிதர் கூற, ஆலடியில் இருந்த அனைவரும் எழுந்து பாராட்டி அமர்ந்தனர்.

தொடர்ந்து ஆலடியில் அமைதி நிலவியது. அமைதியைக் குலைக்க பண்டிதர் மீளவும் குரல் கொடுத்தார்.

நயினாதீவு நாகபூசணி அம்மனின்ர கும்பாபிசேகம் மிகவும் சிறப்பாக நடந்தது.

ஆனாலும் ஆலயத்திற்குள்ள கையடக்கத் தொலைபேசியில படம் எடுக்கிறதில பலரும் ஈடுபட்டிருந்ததைப் பார்த்த போது மிகுந்த வேதனையாக இருந்தது.

பிரதான கும்பம் வீதி வலம் வந்து உள்வீதிக்கு வந்தபோது, அந்தத் தெய்வீகமான காட்சியைக் கண்ணால கண்டு வணங்காமல்; போனுகளைத் தூக்கிப் பிடிச்சுக் கொண்டு வீடியோ எடுத்ததுமட்டுமல்ல.

அங்க நின்று கும்பிட்டவர்களுக்கும் அசௌகரியங்களை ஏற்படுத்திச்சினம்.ஆகையால இனிமேல் எல்லா ஆலயங்களும் உள்வீதிக்குள்ள படம் பிடிப்பதை முற்றுமுழுதாகத் தடை செய்ய வேணும்.

இது விடயத்தில நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய நிர்வாகம் மிகவும் கண்டிப்பாக இருக்க வேணும்.

கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்டு கும்பாபிஷேகம் செய்ய, அதனை நேரில் கண்டு தரிசிக்காமல் ஆலயத்துக்குள்ள நிண்டு போனில படம்பிடிச்சு அதில பார்க்கிறதென்பதைவிட்ட மடமைத் தனம் வேறு என்ன இருக்க முடியும்.

இவ்வாறு பண்டிதர் கூறியதும் ஆலடி நிசப்தமாகியது.

நிசப்தத்தை முடிவுறுத்த சாத்திரியார் சதாசிவம் குரல் தந்தார்.

**சாத்திரியார்:-** முன்பெல்லாம் எங்கட சைவ ஆலயங்களில பிரசங்கம் நற்சிந்தனை என்பன நடைபெறும்.

அதில ஆலயத்துக்குள்ள செய்யத் தகாதவை, ஆலயத்திற்குச் செல்லும் போது எப்படியாகச் செல்ல வேண்டும் என்ற விதி முறைகளை சிவாச்சாரியார்கள் சொல்லிக் கொடுப்பினம்.

ஆனால் இப்ப சிவாச்சாரியார்களுக்கு நேரமேயில்லை.

அதோட அவர்களும் கையடக்கத் தொலைபேசியோட தானே நிற்கினம். அண்மையில ஒரு மரணச் சடங்கிற்குப் சென்றிருந்தன்.

அபரக்கிரியை செய்த சிவாச்சாரியார் பூசை செய்யிறதும் ரெலிபோன் கதைக்கிறதுமாக இருந்தார்.

இவ்வாறு சாத்திரியார் கூற சிறாப்பர் கனகசபை இடையில் குறுக்கிட்டார்.

**சிறாப்பர்:-** சாத்திரியார் சொல்லுறுது நூறு வீதம் உண்மை.

அபரக் கிரியைகள் செய்கிற சிவாச்சாரியார்கள் பக்தி முத்தியாகச் செய்ய வேணும்.

அவர்கள் செய்கின்ற கிரியையால ஆத்மா சாந்தியடையும் என்று மக்கள் நம்புகினம்.

முன்பெல்லாம் இறந்தவரின் உடலுக்கான அபிஷேகத்தை சிவாச்சாரியார் தான் செய்வார். ஆனால் இப்ப அபரக் கிரியைகளை செய்கிற சிவா ச்சாரியார் அந்த இடத் திற்கே போகமாட் டார்.

இப்படியான செப்படி வித்தைகளைச் செய்கிறதால நம்பிக்கை கெட்டுப் போகுது. இந்த நிலைமை நீடித்தால் அபரக்கிரியைகள் ஏனோ தானோ என்பதாகிவிடும்.அது ஒரு காட்சிக்குரிய விடயமாகத் தான் இருக்கும்.

**வாத்தியார்:-** இப்படியான செப்படி வித்தைகள் அறிவு ஞானக் குறைவால ஏற்படுகிறதாக நான் நினைக்கிறன். ஆகையால எங்கட இளம் சிவாச்சாரியார்கள் வேத, ஆகமங்களை ஐயந்திரி புறக் கற்றுத் தேற வேணும்.

எங்களிட்ட இருக்கிற உத்தம சிவாச்சாரியார்களிட்ட கற்க வேணும்.இதைச் செய்யாவிட்டால், பிரதம குரு கிரியை செய்து கொண்டிருக்கும் போது உதவிக்குரு அருகிலுள்ளவர்களுடன் கதைத்துக் கொண்டு தான் நிற்பார். இதால தான் சிவாச்சாரியர்கள் மீதான மரியாதையை பொது மக்கள் குறைத்துக் கொள்ளுகினம்.

**விதானையார்:-** உண்மை தான். இந்தியாவில அயோத்தி ராமர் கோவில் தலைமைச் சிவாச்சாரியார் பதவிக்கு விண்ணப்பம் கோரப்பட்ட போது, மூவாயிரம் பேர் விண்ணப்பிச்சிருக்கினம். இதில 200 பேரைத் தெரிவு செய்து அவர்களுக்கு நேர்முகத் தேர்வு நடத்தி அதில ஒருவரைத் தெரிவு செய்தினம்.

அவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர் ஒரு இளம் சிவாச்சாரியார். அவரை நேர்முகத் தேர்வு செய்த போது வேத, ஆகம, உபநிடதங்களில அவர் அபாரமான தேர்ச்சி பெற்றவராக இருந்ததைக் கண்டு அங்கிருந்தவர்கள் வியந்திருக்கினம்.

இவ்வாறு விதானையார் கூற, அந்நேரம் பார்த்து ஆலடிப் பிள்ளையார் கோவில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தென் இலங்கையில் நடைபெறும் துப்பாக்கி சூடுகளுக்கு பின்னணி எதுவாக இருக்கும் வியாசரே?

**தயாபரன் ஒட்டுசுட்டான்**

**டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த தேங்கி நிற்கும் தண்ணீரில் கழிவு ஓயிலை ஊற்றினால் சூழல் மாசு பாடாதா வியாசரே?**

மாசுபடும் தான் ஆயினும் டெங்கின் தாக்கத்திலும் அத் தாக்கம் குறைவானதே. சமீபத்தில் டெங்கு நோய்த் தாக்கம் வடக்கில் மிகத் தீவிரமாக இருக்கும் நிலையில் பலரை உயிரிழக்கவும் செய்து விட்டது.
டெங்கு நுளம்பை சடுதியாகக் கட்டுப்படுத்த வல்ல தொழில் நுட்பங்களை சுகாதாரத்துறை தெரிவு செய்ய வேண்டும்.
இல்லையேல் அது பெரும் இழப்புகளை ஏற்படுத்தும்.

**ராசா திருநெல்வேலி**

**எம்மிடம் கைநீட்டி வாக்கு வாங்கியவர்கள் அரசாங்கத்திடம் கைகட்டி காசு வாங்குகின்றார்களே?**

தமிழ் தேசியம் , தமிழ் உணர்வு , தமிழர் உரிமை, தமிழர்களின் தன்மானம், தமிழினம் தலை நிமிர ஒன்றுபடுவோம் என்ற வீர வசனங்களை நம்பிய உங்களிடம் இன்னும் ஐந்து வருடங்களின் பின் அதே வாக்குறுதியுடன் வருவார்கள்.
அதுவரை அந்த வாக்குறுதிகளுக்கு சிறிய இடைவேளை விட்டுவிட்டு கை கட்டி வாய்பொத்தி கமுக்கமாய் இருந்து தமது வங்கிக் கணக்கை கிடு கிடு என ஏற்றிவிடுவார்கள்.
அது அவர்கள் பிரச்சினை இல்லை உங்கள் பிரச்சினையே.

**ஆர்த்திகன் யாழ்ப்பாணம்**

**18 வயதிற்கு மேற்பட்டவர்கள் வரிகட்டும் சட்டம் தொடர்பில்?**

வீட்டின் அடுப்பில் நெருப்பெரிந்து பல வாரங்கள் கடந்துவிட்டது.
இப்போதெல்லாம் பூனைகூட எங்கள் அடுப்புக்களை நாடமாட்டுதாம் ஏனென்றால் அதில் சூடு இல்லாத போது அது ஏன் அங்குவந்து படுத்துக் கொள்ளும்.
நிலை இவ்வாறு இருக்கையில் வரி கட்ட வேண்டும் என்ற அறிவித்தல் யாருக்கானது என்று இன்னமும் புரியாமல் தவிக்கின்றனர் நாட்டு மக்கள்.




அன்பு வாசகர்களே!
உங்கள் எண்ணத்தில்
தோன்றிய
கேள்விகளை
076 097 3126
என்ற இலக்கத்திற்கு
SMS செய்யுங்கள்

**விஜயரட்ணம் யாழ்ப்பாணம்**

**அடுத்த பட்டிப் பொங்கலுக்கு பசுக்கள் உயிருடன் இருக்குமா வியாசரே?**

கோமாதா எங்கள் குலமாதா என்று நாம் சிறு வயதில் பாடம் படித்திருப்போம்.
குழந்தைகளுக்கு தாய்ப்பால் கொடுக்கிறோம் தாய் இறந்து விட்டால் பசுப்பாலையே குழந்தைகளுக்குக் கொடுக்கின்றோம்.
அந்தளவுக்கு பசுக்கள் தாயாய் உருமாறி சேய்களுக்குப் பால் தருகிறது.
அப்பேர்ப்பட்ட பசுக்களை இறைச்சியாக்கும் ஈனர்களைப் பிடித்து தூக்கில் போடும் சட்ட த்தை இயற்ற வேண்டும்.
இல்லையேல் எமது நடமாடும் தெய்வங்களை நாங்கள் இழக்க வேண்டிய நிலையே ஏற்படும்.



அயோத்தி இராமர் கோவில் கட்டிய தொழிலாளர்களுக்கு இந்தியப் பிரமர் மோடி மலர் தூவிக் கௌரவித்தாராமே?

**ரிதுஷ் மந்துவில்**

**வாழ்க்கையில் மிகக் கஷ்டமான விடயம் எது வியாசரே?**

பேருந்தில், தொடருந்தில் ஜன்னலோர சீற்றைப்பிடிப்பதை விட இருக்கும் கஷ்டம் அந்த ஜன்னலைத் திறப்பதில் இருக்கும்.
இதைவிட வாழ்வில் பெரும் கஷ்டம் வரப்போகிறதா என்ன?

**மதுவன் மீசாலை**

**ஆட்சியாளர்களை புலிகள் என்கிறாரே தர்மரத்தினதேரர்.**

இவர்களுக்கு புலிப்பூச்சாண்டி காட்டாமல் இருக்க முடியாது.
உணவுக்கு உப்பு சேர்ப்பதை போல அனைத்து விடயங்களுக்கும் புலிகளை இழுக்காமல் இவர்களால் இருக்கவே முடியாது.
அந்த மேனியாவுக்கு நம்மால் எதைச் சொல்லிவிட முடியும்.

**பிரபா அத்தியடி**

**அயோத்தி இராமர் கோவில் கட்டிய தொழிலாளர்களுக்கு இந்தியப் பிரமர் மோடி மலர் தூவிக் கௌரவித்தாராமே?**

அயோத்தியில் இராமர் கோவில் மலர வேண்டும் என்று முஸ்லிம் சகோதரர்களும் விரும்பினார்கள் என்பதே யதார்த்தமான உண்மை.
அயோத்தி இராம பிரான் அவதரித்த இடம். அது இராமபிரானின் கால் தடம் பதிந்த புனித பூமி.
அந்தப் பூமியை ஒருதடவையேனும். மிதித்து பாவ விமோசம் பெற்று விடவேண்டும் என ஏங்கும் கோடிக் கணக்கானவர்களில் இந்த வியாசரும் ஒருவன்.

**விஜயதாசன் உரும்பிராய்**

**தென் இலங்கையில் நடைபெறும் துப்பாக்கி சூடுகளுக்கு பின்னணி எதுவாக இருக்கும் வியாசரே?**

அது எதுவாகவும் இருந்துவிட்டுப் போகட்டும். தென்னிலங்கையில் நடைபெற்ற சூட்டுச் சம்பவம் போல் வடக்குக் கிழக்கில் நடந்திருந்தால் நிலை எப்படி இருந்திருக்கும் என்பதை சிந்தித்துப்பாருங்கள்.
புலி உருப்பெற்றுவிட்டது.பயங்கரவாதம் தலைதூக்கிவிட்டது என்று வடகிழக்கில் இராணுவத்தை குவித்து அதகளப்படுத்தியிருப்பார்கள்.
ஒரு விடயம் நடக்கும் இடத்தைப் பொறுத்தே அதன் தாக்கம் உணரப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலத்தால் அழியாத கானங்கள்

படம் : ஜானி
இசை : இளையராஜா
பாடியவர் : எஸ்.ஜானகி
வரிகள் : கங்கை அமரன்



நில்லென்று சொன்னால் மனம் நின்றாள் போதும்
நீங்காத நெஞ்சில் அலை ஓய்ந்தால் போதும்
மௌனத்தின் ராகம் கேளாதோ
மௌனத்தின் தாளம் போடாதோ
வாழும்.. காலம் ..
யாவும் எங்கே நெஞ்சம் தேடும் ..

காற்றில் எந்தன் கீதம்..
காணாத ஒன்றை தேடுதே..
அலை போல நினைவாக
சில்லென்று வீசும் மாலை நேரக்
காற்றில் எந்தன் கீதம்..
காணாத ஒன்றை தேடுதே..

காற்றில் எந்தன் கீதம்..
காணாத ஒன்றை தேடுதே..
அலை போல நினைவாக
சில்லென்று வீசும் மாலை நேரக்
காற்றில் எந்தன் கீதம்..
காணாத ஒன்றை தேடுதே..

எங்கெங்கும் இன்பம் அது கோலம் போட
என்னுள்ள வீணை ஒரு ராகம் பாட
அன்புள்ள நெஞ்சை காணாதோ
ஆனந்த ராகம் பாடாதோ
கண்கள் ஏங்கும்
நெஞ்சை தாபம் மேலும் ஏற்றும்

காற்றில் எந்தன் கீதம்..
காணாத ஒன்றை தேடுதே..
அலை போல நினைவாக
சில்லென்று வீசும் மாலை நேரக்
காற்றில் எந்தன் கீதம்...
காணாத ஒன்றை தேடுதே..

நில்லென்று சொன்னால் மனம் நின்றாள் போதும்
நீங்காத நெஞ்சில் அலை ஓய்ந்தால் போதும்
மௌனத்தின் ராகம் கேளாதோ
மௌனத்தின் தாளம் போடாதோ
வாழும்.. காலம்..
யாவும் எங்கே நெஞ்சம் தேடும்..


காற்றில் எந்தன் கீதம்..
காணாத ஒன்றை தேடுதே..
அலை போல நினைவாக
சில்லென்று வீசும் மாலை நேரக்
காற்றில் எந்தன் கீதம்..
காணாத ஒன்றை தேடுதே..

# ரோஹித்தின் கோபமும் நியாயமும்!

தென்னாபிரிக்கத் தொடரை முடித்து விட்டு, ஆப்கானிஸ்தானுக்கு எதிரான தொடரில் ஆடிக்கொண்டிருக்கிறது இந்திய அணி. தென்னாபிரிக்காவிற்கு எதிரான டெஸ்ட் தொடரின் முடிவில் இந்திய அணியின் கப்டன் ரோஹித் சர்மா முக்கியமான கருத்துகள் சிலவற்றைப் பேசியிருந்தார். சமீப காலத்தில் இந்திய கப்டன் ஒருவர் பேசிய ஆக்ரோஷமான பேச்சு என இதை எடுத்துக் கொள்ளலாம்.

இந்தியா மற்றும் தென்னாபிரிக்கா இடையே இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் ஆடப்பட்டது. இதில் இரண்டாவது டெஸ்ட் போட்டி கேப்டவுனில் நடந்தது. இந்த டெஸ்ட் வெறும் ஒன்றரை நாளில் முடிவை எட்டியது. ஒரே நாளில் 23 விக்கெட்டுகள் வீழ்த்தப்பட்டன. மிகக் குறைவான பந்துகளிலேயே முடிவு எட்டப்பட்ட போட்டிகளில் இதுவும் ஒன்று என்ற ரெக்கார்டும் பதிவானது. சிறப்பாகச் செயற்பட்டது இந்திய அணிதான். போட்டியை வென்றதும் இந்திய அணிதான். ஆனாலும் போட்டிக்குப் பிறகான பத்திரிகையாளர் சந்திப்பில் ரோஹித் சர்மா காட்டமாகத்தான் பேசினார். காரணம், பிட்ச் பற்றிய சர்ச்சைகள். இந்தியாவில் வைத்து நடைபெற்ற போட்டிகள் இதேமாதிரியாக குறுகிய நேரத்தில் முடிந்த சமயங்களில் வெளிநாட்டினர் பலரும் இந்திய பிட்ச்கள் பற்றி கன்னாபின்னாவென கருத்துக்களைக் கூறியிருக்கின்றனர். அதற்கான பதிலடியாகத்தான் ரோஹித்தின் கருத்துக்கள் அமைந்தன.

'இந்திய மைதானங்களைப் பற்றி தேவையில்லாத விமர்சனங்களை முன்வைக்காமல் வாயை மூடிக்கொண்டு இருந்தார்கள் எனில் இப்படியான பிட்ச்களில் விளையாடுவதில் எங்களுக்கு எந்தத் தயக்கமும் இல்லை. இப்படியான பிட்ச்கள் ஆபத்தானவைதான். சவாலானவைதான். ஆனால், எங்களை நாங்களே சவாலுக்கு உட்படுத்திக்கொள்ளத்தான் இப்படியான ஆடுகளங்களில் ஆட வந்திருக்கிறோம். ஆக, மற்ற அணியினரும் இந்தியாவிற்கு வரும்போது இது போன்ற சவால்களை எதிர்கொள்ளத் தயாராக இருக்க வேண்டும்.



இந்தியாவில் முதல் நாளிலேயே பந்து திரும்பினால், பிட்ச்சைப் பற்றி ஏதேதோ பேசத் தொடங்கிவிடுகிறார்கள். பிட்ச்சில் ஏகப்பட்ட தூசியும் துகள்களும் இருப்பதாகச் சொல்வார்கள். ஆனால், தென்னாபிரிக்காவில் பிட்ச்சில் இருக்கும் விரிசல்களைப் பற்றி அவர்கள் பேசவே மாட்டார்கள்.

எல்லாப் பக்கமும் எல்லோரும் நடுநிலையாக நடந்து கொள்ள வேண்டும். குறிப்பாக, நடுவர்கள் பிட்ச்களைப் பரிசோதிப்பதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும். உலகக்கோப்பையின் இறுதிப்போட்டி நடந்த பிட்ச்சை சராசரிக்கும் குறைவான தரம் கொண்ட பிட்ச்சாக மதிப்பிட்டிருக்கிறார்கள். அந்த பிட்ச்சில் ஒரு பட்ஸ்மேன் சதமடித்திருக்கிறார் எனில், எப்படி தரமற்ற பிட்சென மதிப்பிட்டார்கள்? ஐ.சி.சியும் நடுவர்களும் பிட்ச்சின் அடிப்படையில் மட்டுமே தரத்தை நிர்ணயம் செய்ய வேண்டும். மாறாக, நாடுகளின் அடிப்படையில் முடிவுகளை எடுக்கக் கூடாது. மீண்டும் சொல்கிறேன். நாங்கள் இப்படியான பிட்ச்களில் ஆடத் தயாராக இருக்கிறோம். ஆனால், நீங்கள் உங்களின் கண்களையும் காதுகளையும் திறந்து வைத்துக்கொண்டு நடுநிலையாகச் செயற்பட வேண்டும்" என அந்தப் பத்திரிகையாளர் சந்திப்பில் உறுமியிருந்தார் ரோஹித்.

வரலாற்றிலேயே இதற்கு முன் ஒரே ஒரு முறைதான் இந்திய அணி, தென்னாபிரிக்காவில் டெஸ்ட் தொடரை சமன் செய்திருந்தது. இப்போது இரண்டாவது முறையாக அந்தச் சாதனையைச் செய்திருக்கிறது. இருந்தபோதிலும் ரோஹித் அதைப் பற்றி அதிகம் பேசாமல் பிட்ச் குறித்துதான் அதிகம் பேசினார். அதுவும் கோபமாக.

ஒவ்வொரு நாட்டின் வானிலை, தட்பவெப்பம், மண்வளம் ஆகியவற்றைப் பொறுத்து பிட்ச்சின் தன்மைகள் மாறும். இந்திய பிட்ச்கள் பெரும்பாலும் ஸ்பின்னர்களுக்கு சாதகமாகவும் பேட்டர்களுக்கு சாதகமாகவும் இருக்கும். இதே சூழலில் பல ஆண்டுகளாக ஆடிப் பழக்கப்பட்டுவிட்டதால் இந்த பிட்ச்கள் இந்திய வீரர்களுக்கு சொந்த ஊரில் ஆடுவது எளிமையாக இருக்கும். இதே சமாச்சாரம்தான் மற்ற நாடுகளுக்கும். அவரவர் நாடுகளில் ஆடும்போது அந்தந்த பிட்ச்கள் அவர்களுக்கு சாதகமாக இருக்கும். தென்னாபிரிக்கா ஆடுகளங்கள் வேகப்பந்து வீச்சாளர்களின் திமிறி எழும் பவுன்சர்களுக்கு சாதகமாக இருக்கும். அங்கே தென்னாபிரிக்காவின் வேக வீச்சாளர்களைவிட, இந்தியாவின் வேக வீச்சாளர்கள் சிறப்பாகச் செயறபடும்பட்சத்தில் முடிவு இந்திய அணிக்கு சாதகமாக இருக்கும்.

அதேமாதிரி, இந்தியாவில் தென்னாபிரிக்க சுழல் பந்துவீச்சாளர்கள் சிறப்பாகச் செயற்படும்பட்சத்தில், முடிவு அவர்களுக்குச் சாதகமாக இருக்கும். இது இவ்வளவுதான். ஆனால், இதைப் பலரும் இவ்வளவு எளிதாக அணுகுவதே இல்லை. இரண்டாண்டுகளுக்கு முன்பு இந்தியாவிற்கு இங்கிலாந்து அணி வந்திருந்தது. முழுக்க முழுக்க ஸ்பின்னர்களுக்கு சாதகமான பிட்ச். எப்போதாவது பந்தைக் கையில் தொடும் இங்கிலாந்தின் ஜோ ரூட்டே 5 விக்கெட்டுகளை அகமதாபாத்தில் அள்ளினார். அந்தத் தொடரை இந்தியாதான் வென்றது. அப்போது பிட்ச் குறித்துக் கடுமையான விமர்சனங்களும் கேலிகளும் எழுந்தன.

இங்கிலாந்து அணியின் முன்னாள் வீரர் மைக்கேல் வாஹன் உழவு நிலத்தைப் போட்டோ எடுத்துப் போட்டுவிட்டு இதுதான் இந்திய பிட்ச் என்றெல்லாம் கிண்டலடித்தார். நடந்து முடிந்த உலகக்கோப்பையில்கூட இந்திய அணி தங்களுக்குச் சாதகமாக பிட்ச்களை மாற்றியதாகக் குற்றச்சாட்டு எழுந்திருந்தது. ஆனால், இவற்றிலெல்லாம் பெரிதாக கவனமே செலுத்தத் தேவையில்லை. ப்ரீமியர் லீக் காலத்திற்குள் கிரிக்கெட் நுழைந்துவிட்டது. எல்லா வீரர்களும் எல்லா நாடுகளுக்கும் சென்று இருபது-20 லீக் போட்டிகளில் ஆட தொடங்கிவிட்டார்கள்.

ஆக, பிட்ச் பற்றி வரம்பு மீறிப் பேசுவது, ரோஹித் சொல்வதைப் போல நடுநிலையற்ற செயலே.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் மகள் எங்களுடன் இருக்கிறாள்

**பிடித்தவர்கள் இறக்கும்போது அவர்கள் பயன்படுத்திய பொருட்களைத் தூக்கி எறியவோ, அவர்களது எண்ணை தொலைபேசியிலிருந்து நீக்கவோ மனம் வராது. நெருக்க மானவர்களின் நினைவுகளை, அவர்கள் பயன்படுத்திய பொருட்களோடு சேர்த்து நம்மோடு வைத்துக் கொள்வோம்.**

அமெரிக்காவின் இடாஹோ நகரத்தைச் சேர்ந்த கெய்லி மற்றும் ஜேக் மாஸ்ஸி என்ற தம்பதி, TBCD (Tubulin folding cofactor D) என்ற அரியவகை நோயால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த தங்கள் 15 மாத குழந்தையின் சாம்பலை அழகான கற்களாக மாற்றி தங்களோடு வைத்துள்ளனர்.



இந்தத் தம்பதிக்கு மூன்று குழந்தைகள் இருக்கின்றனர். மூன்றாவது குழந்தையான பாப்பிக்கு, நான்கு மாதங்கள் ஆனபோது பார்வை சரியாகத் தெரியவில்லை என்பதைப் பெற்றோர் அறிந்துள்ளனர்.

மருத்துவர்கள் மேற்கொண்ட எம்.ஆர்.ஐ ஸ்கேனில், மூளையின் மையப் பகுதியான கார்பஸ் கலோசம் குழந்தைக்குச் சரியாக வளர்ச்சியடையவில்லை என்பது தெரிய வந்தது.

மரபணு பரிசோதனையில், அரிய வகை TBCD நோயால் குழந்தை பாதிக்கப்பட்டு இருப்பதை அறிந்தனர்.

உலகில், இந்த அரிய வகை நோயால் பாதிக்கப்பட்ட 38 ஆவது குழந்தை பாப்பி என்பது அவர்களுக்குத் தெரிய வந்தது.

குழந்தைக்கு மூச்சு விடுவதில் சிரமம் ஏற்பட்டதை தொடர்ந்து மருத்துவமனையில் அனுமதித்தனர் பெற்றோர். தீவிர சிகிச்சைப் பிரிவுக்குக் குழந்தையை மாற்றியபோது குழந்தையின் இதயத் துடிப்பு நின்று போனது.

இது குறித்து கெய்லி கூறுகையில், "நாங்கள் பாப்பியின் சாம்பலை எங்களுடன் வீட்டில் வைத்திருக்க விரும்பினோம். சாம்பலை கலசத்தில் கொண்டு வந்து வைக்கலாம். ஆனால், வீட்டில் இரண்டு சிறு குழந்தைகள் இருப்பதால், அவர்கள் பயப்படுவார்கள். அதை உடைக்க நேரிடலாம். அதை நாங்கள் விரும்பவில்லை.

அப்போதுதான், இறந்துபோன அன்புக்குரியவர்களின் சாம்பலைக் கற்களாக மாற்றும் 'பார்ட்டிங் ஸ்டோன்ஸ்' என்ற அமைப்பு குறித்து அறிந்தோம். அவர்களைத் தொடர்பு கொண்டோம்.

சில மாதங்களுக்குப் பிறகு, கையால் எழுதப்பட்ட ஒரு குறிப்புடன் அட்டைப்பெட்டியில் சில கற்கள் வந்தன. அந்தக் குறிப்பில், "உங்கள் மகளை எங்களை நம்பி ஒப்படைத்ததற்கு நன்றி" என்று இருந்தது. இது மிகவும் உணர்வுபூர்வமாக இருந்தது.

அந்தப் பெட்டியில் 13 கற்கள் இருந்தன. அவளது உடல் மிகவும் சிறியதாக இருந்தது. அதனால் நிச்சயமாக அதிக கற்கள் இருக்கப்போவதில்லை. அந்தக் கற்கள் வெள்ளை நிறத்தில் சிறிய மஞ்சள் புள்ளிகளுடன் இருந்தன.

"தற்போது குழந்தை உயிருடன் இல்லை என்றாலும் கற்களின் மூலமாக பாப்பியுடன் இருப்பது போல உணர்கிறோம்" என்று தெரிவித்துள்ளார்.



இந்த உலகில் பணம் சம்பாதிப்பதுதான் கடினமான வேலை என்று நாம் நினைத்துக்கொண்டிருக்கிறோம். உண்மையில் மனிதர்களின் அன்பையும் நட்பையும் பெறுவதுதான் பலருக்கும் சவாலான விடயமாக இருக்கிறது. "ஆனால், கொஞ்சம் நம் பார்வையையும் அணுகுமுறையையும் மாற்றிக்கொண்டால் மனித மனங்களை அன்பால் கொள்ளை கொண்டுவிடலாம்" அப்படி பிறரது அன்பைச் சம்பாதிக்க பலருக்கும் பிடிக்கும் நபராக நீங்கள் இருக்க 10 ஆலோசனைகள்.

1. நல்ல பெயரை எடுக்கவேண்டும் என்பதற்காக செயற்கையாக சில செயல்களைச் செய்தால், 'இவர் பேருக்காக பொய்யாக நடிக்கிறார்' என்று உங்களை எளிதில் எடைபோட்டுவிடுவார்கள். எனவே, எந்த வித எதிர்பார்ப்புமின்றி, முழு மனதுடன் உங்களது செயல்களைச் செய்யுங்கள். உங்களது இந்தத் தனித்துவமான பண்பைப் பார்த்துப் பலர் உங்களை விரும்பத் தொடங்கிவிடுவர்.

2. எப்போதும் சிரித்த முகத்துடன் இருங்கள். அணுகுவதற்கு எளிமையாகவும் இனிமையாகவும் இருங்கள். இப்படிப்பட்ட நபர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளத்தான் பலரும் விரும்புவர். 'அன்பு மனதில் இருந்தால் போதும்' என்று சொல்லி, முகத்தில் கடுமையைக் காட்டினால் நட்பு பாராட்ட யாரும் விரும்பமாட்டார்கள்.

3. யாருடன் உரையாடினாலும், எந்தவொரு பாசாங்கும் இருக்கவேண்டாம். பொய்ப்பூச்சுகள் ஏதுமின்றித் திறந்த மனதுடனும், உண்மைத் தன்மையுடனும் உரையாடலை மேற்கொள்ளும்போது எதிரில் இருப்பவருக்கு நம்மீது மரியாதையும் நம்பிக்கையும் அதிகரிக்கும்.

4. மனிதர்கள் சில சமயங்களில் உங்களுக்குக் கோபம் வரும்படி நடந்துகொள்ளலாம். இதன் காரணமாக உங்களுக்குக் கோபம் வருவது இயற்கையே என்றாலும், கோபம் தலைக்கேறும் சமயங்களில் வார்த்தைகளை விடாதீர்கள். சிந்திய வார்த்தைகளை மீண்டும் எடுக்க முடியாது என்பதை நினைவில் கொள்ளுங்கள். கோபத்தில் நீங்கள் பேசும் வார்த்தைகள் எதிரில் இருப்பவரைக் காயப்படுத்துவதோடு, உங்களுக்கும் அவருக்கும் இடையில் இருக்கும் உறவையே அது துண்டித்துவிடும். எனவே, கோபமாக இருக்கும்போது எதுவும் பேசாமல் அமைதி காத்திடுங்கள். பின்னர் நீங்கள் இயல்பு நிலைக்குத் திரும்பியதும் சம்பந்தப்பட்ட நபரிடம் பேசுங்கள். அவ்வாறு பேசும்போதுகூட அவரைக் குறை கூறாதீர்கள். குற்றம் சொல்லாதீர்கள். உங்களது உணர்வுகளை மட்டும் தெளிவாக வெளிப்படுத்துங்கள்.

# எல்லோரும் விரும்பும் நபராக நீங்கள் இருக்க...

5. உங்களைச் சுற்றி இருப்பவர்களிடம் இருக்கும் நல்லவற்றை மனம் திறந்து பாராட்டுங்கள். அதேசமயம், அவர்களிடம் ஏதேனும் குறைகளை நீங்கள் கண்டறிந்தால் அதை அவர்களிடம் தன்மையாக வெளிப்படுத்துங்கள். குறிப்பாக, அவர்களிடம் அறிவுரை வழங்கும் தொனியில் மட்டும் பேசவேண்டாம். ஏனென்றால், உங்களது அட்வைஸைக் கேட்டு யாரும் தங்கள் இயல்பை மாற்றிக்கொள்ளப்போவதில்லை. 'நாம் இந்த குணத்தை மாற்றிக்கொள்ள வேண்டும்' என்று அவர்களாக நினைத்தால் மட்டுமே அது சாத்தியமாகும். எனவே, வெகு நாகரிகமாக உங்கள் ஆலோசனைகளைப் பகிருங்கள்.

6. அடுத்தவர்களின் கருத்துகளை மதியுங்கள். தேவையற்ற விவாதங்களுக்குள் செல்லாதீர்கள். தேவையற்ற விவாதங்கள் நட்பு மற்றும் உறவுகளுக்கு இடையில் விரிசலை உண்டாக்கிவிடும்.

7. உங்களிடம் யார், என்ன பேசினாலும் அதை நூறு விழுக்காடு கவனம் கொடுத்துக் கேளுங்கள். அப்போதுதான் அவர்களை நீங்கள் முக்கியமான நபராகக் கருதுகிறீர்கள் என்பது அவர்களுக்குப் புரியும். ஒருவேளை, அவர்கள் ஏதாவது சொல்ல வரும் வேளையில் நீங்கள் ஏதேனும் அவசர வேலையில் இருந்தால், நீங்கள் சொல்லும் விஷயத்தைக் கேட்க நான் மிகவும் ஆர்வமாக இருக்கிறேன். ஆனால், தற்போது எனக்கு அவசர வேலை ஒன்று உள்ளது. அதை முடித்துவிட்டு வந்து நீங்கள் பேசுவதைக் கேட்கட்டுமா?' என்று தன்மையாகப் பேசுங்கள். இதுபோன்ற உங்களது முன்னெடுப்புகள், எதிரில் இருப்பவரிடம் உங்கள் மதிப்பைப் பன்மடங்கு உயர்த்தும்.

8. எதிரில் இருப்பவர்களின் மனநிலையை உணர்ந்து பேசுங்கள். சில சமயம் அவர்கள் என்ன மனநிலையில் இருக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்ளாமல் நீங்கள் ஏதேனும் ஜோக் அடிக்கும்போது அவர் மனம் புண்பட்டுவிடும். எனவே, இந்த விஷயத்தில் எப்போதும் கவனமாக இருங்கள். குறிப்பாக, உண்மையான விஷயங்களை வைத்து ஒருபோதும் ஜோக் அடிக்காதீர்கள். அதேபோல உருவக்கேலியும் கூடாது. இப்படிப்பட்ட கிண்டல், கேலி செய்யும் மனிதர்களுடன் மற்றவர்கள் நட்பு பாராட்ட விரும்பமாட்டார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

9. உங்களால் இயன்ற அளவுக்குப் பிறருக்கு உதவி செய்யுங்கள். உதவும் குணம் உள்ளவர்களை இந்த உலகமே விரும்பும். அதே சமயம், உங்களது இந்த இயல்பைத் தவறாகப் பிறர் பயன்படுத்திக்கொள்ளாமல் பார்த்துக்கொள்ள வேண்டியதும் உங்கள் கையில்தான் உள்ளது.

10. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விதமாக இருக்காமல் எப்போதும் ஒரே மாதிரி பேசுங்கள். ஒரே மாதிரி நடந்துகொள்ளுங்கள். உங்கள் நேர்மையும் உங்கள் நடத்தையும்தான் உங்களுக்கான மரியாதையையும் மதிப்பையும் பெற்றுத்தரும்."

'யூ ஆர் ஆஸம்' என்று சொல்லட்டும் எல்லோரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்

## மழையே மாற்றமேன்?

பெய்யாது விட்டாலும்
பொய்யாகிப் போனதாய்
பெயர் கொண்டாய்
பொய்த்து விட்டால்
புழுங்குவர்
சொந்த மண்ணில்
வெந்து நொந்தோம்
மாரி மழையென குண்டுகள் மழையாக
மேகக்கருக்களில்
நீயும் மறைந்ததேனோ
இன்றும் பொழிகிறாய்
எங்களை எதிரிகளாய்
எறிகணை வீசியோர்
நாட்டிலும்
அமைதி மழையாய்
அன்புடன் பொழிவாய்

தமிழினியன் பரந்தாமன்,
வவுனியா.

## நாதியற்ற தமிழன் நாம்

மனது புடைந்த சகதிக்குள்
கனதி நிறைத்த அவலங்கள்
கண் எதிரின் விம்பதரிசனம்
திரும்பி விடாத வேண்டுகை
தெருக்களில் தொலைத்து
கருங்கல்லில் கால் ஒய்ந்து கிடக்கும்
மீண்டு புதிதாய்ப் பிறக்கும்
வேண்டுகைக்கான தேடல் இது!
வேஷத்து மானிட தீண்டல்
எம்மை வேரறுக்க நினைக்கும்
ஆண்டுகள் பலவும்
அலைந்தோடிப் போயினும்
அவனி நரைத்து
கிழாப்பிரம் கொள்ளினும்
அம்மிக்கல்லாய் அடங்கி
இருக்க மனம் ஒப்பவில்லை
ஆவேஷத்தில் அலறவும்
துடிக்கவும் எம் அங்கம்
பலவீனமானதுண்டு
ஏதும் அருகதையற்ற
தெருவழித் தேடலாய்
ஒரு வழியும் எமக்கின்றி
அலைகிறோம்
கலை பல கற்ற தேசத்தில்
நரைபலிக் கடாக்களாய்
நாமும் அலைகிறோம்
எந்நாதியுமற்று தமிழனாய்

யாழ் வாகீஷ்

## இவர்கள்

சாதனை பட்டியல்
ஏதுமின்றி
காலத்தை வீணாக்கி
காலாவதியாகி
கனவுகள் கலைந்து
கீழே வீழ்ந்தவர்கள்

விலை போகா
வீண்பேச்சும்
வீர வசனமுமாய்
தலைமை கற்பனையில்
இனம் பற்றி
கவலையின்றி
ஒற்றுமையை
ஒரம் கட்டியவர்கள்

அடங்காத
அரசியல் ஆசையால்
தேர்தல் திருவிழாவில்
தேசியத்தை தொலைத்தவர்கள்
வாக்கு வேட்டைக்காய்
அரசியல் பசியாற
பொய் முகம்
காட்டுவோர்கள்

தேன்நிலா

## மௌனத்தின் தேடல்-700



## கண்களில் காட்டுகிறது

தாயுமில்லை தந்தையுமில்லை
சொந்தப் பெயரும் இல்லை
இவனுக்குத் தெருவோர வாழ்க்கை
எங்கிருந்தோ வந்த இவன்
உண்ணும் தன் அன்னத்தை
இவளுக்கும் ஊட்டும் காட்சி
கள்ளமில்லா உள்ளத்தின்
பாசப் பிணைப்பை
கண்களில் காட்டுகிறது.

பிரமனி, கொக்குவில்.

## பீஞ்சும் வீஞ்சும்

தனக்கு மிஞ்சினது தான்
தானமும் தர்மமும் என்பது
தங்குதடை ஏதுமின்றி
இங்கு உடைபடுகின்றது
எல்லை கடந்த அன்பிற்கு
முல்லைக்குத் தேர் கொடுத்த
பாரி வள்ளலைக் கூறுவர்
கிள்ளி வழங்காமல் பிரியமுடன்
அள்ளிக் கொடுக்கும் மனம்
வள்ளல் குணத்தின் சிகரம்

க.நாகராசா.நுணாவில்.

## வேலை இல்லை

நீ எசமானியின் மகள்

நான் வேலைக்காரியின் மகன்

எசமானி இதைப் பார்த்தால்

அம்மாவுக்கு நாளை வேலையில்லை

பி.மதுஷ்சன், தையிட்டி.

## பாசப்பிணைப்பு

சிரித்துப் பேசி சிறகடித்து
விளையாடும் பருவம் தன்னில்
பசிக்கு உணவூட்டி மகிழ்ந்திடும்
பாலர் இவர்களின் அன்புக்கு ஈடு இணையுண்டோ?
அண்ணன் தங்கை உறவின் பாச உணர்வினை
அள்ளி உணவூட்டும் கையிலும்
ஆசையுடன் "ஆ" காட்டி வாங்கி சாப்பிடும்
வடிவிலும் புரிந்ததே
குழந்தையுள்ளம் கடவுளுக்குச் சமம் என்பதை
கூறியே நிற்கிறது இவர்களின் செயல்வடிவம்
பாசப் பிணைப்பு இன்று போல் என்றுமிருந்தால்
பாகப் பிரிவினை ஏற்பட வழியேது?



ஆ.செல்வி ,திருநாவலூர்.

## அன்புக்கோர் தங்கை

சட்டிச் சோறு தனை தன் தளிர்க்கரத்தால்
கிள்ளியவள் தான் உண்ணும்முன்னே தன் அண்ணனுக்கு
கச்சிதமாய் அன்புடன் ஊட்டி விடும்
பச்சிளம் பாலகியவள் அன்புக்கோர் தங்கையன்றோ

சி.மகாலட்சுமி கொக்குவில்.

## மௌனத்தின் தேடல்-701



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தேன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல், வலம்புரி- சங்குநாதம்,
இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடல் புறா



காலத்தின் பதிவு 94

மஞ்சளழகியின் மயக்கும் எழிலில் மனத்தைப் பறிகொடுத்துக் காலை நேரத்தில் கடலோரத்தில் தான் கழித்த சில நாழிகைகளை அக்ஷயமுனைக் கோட்டையின் தலைவனான பலவர்மன் பெரிதும் பயன்படுத்திக் கொண்டு விட்டதையும் அகூதாவிடம் அவன் கொண்டிருந்த பயமெனும் கவசமும் இனித் தன்னைக் காப்பாற்றா தென்பதையும் மஞ்சளழகியின் சொற்களிலிருந்து புரிந்து கொண்ட இளையபல்லவன், திடீரென ஒரு முடிவுக்கு வந்து மஞ்சளழகியை கையைப் பிடித்துத் தூக்கி, "வா மஞ்சளழகி," என்றழைத்துக் கொண்டு கொள்ளையர் கூடி நின்ற இடத்தை நோக்கி நடக்கத் துவங்கினான்.

அப்படி நடக்கத் துவங்கிய படைத்தலைவன் முகத்தில் உறுதி பெரிதும் மண்டிக் கிடந்ததைக் கண்ட மஞ்சளழகி, தான் உணர்த்திய பேராபத்தைப் பற்றிக் அவன் சிறிதும் மலைக்காமல் திடீரென ஏதோ முடிவுக்கு வந்துவிட்டதையும் அந்த முடிவைத் தொடர்ந்து கொள்ளையர் பார்க்கும் படியாகத் தன் கையைப் பிடித்துத் தூக்கியதன்றி, தன் கையுடன் அவன் கையைச் சேர்த்துக் கோத்துக் கொண்டே நடக்க முற்பட்டு விட்டதையும் பார்த்ததும் "எதற்காக இவர் இந்தச் சாகசத்தில் இறங்குகிறார்?" என்று தன்னைத் தானே கேட்டுக் கொண்டு விடை காணாமல் தவித்தாள்.

தந்தை எடுக்கக்கூடிய நடவடிக்கைகளுக்குத் தானும் இளைய பல்லவனும் நெருங்கி இழைந்த நிலையே போதுமானதாயிருக்க, தன் கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு கொள்ளையர் முன்பு சென்று மேலும் தங்களிருவர் உறவுக்கும் அத்தாட்சி கூட்ட படைத்தலைவன் ஏன் முயலுகிறான் என்பதை எண்ணிப் பார்த்த மஞ்சளழகிக்கு அதற்குக் காரணம் விளங்கவில்லையானாலும் அவன் இணையற்ற நெஞ்சுரம் படைத்தவன் என்பது மட்டும் சந்தேகமற விளங்கியது.

வெயில் அப்பொழுது சிறிது ஏறிவிட்டதால் அக்ஷயமுனைக் கடற்கரைப் பழுப்பு மணல் சிறிதே சுடத் தொடங்கினாலும் அதைவிட இளைய பல்லவன் ஆபத்தை எண்ணிய மனம் அவளைச் சுட முற்பட்ட வெப்பத்தின் விளைவாகக் காலின் கடுமையை அவள் லட்சியம் செய்யாமலே அவன் பக்கத்தில் நடந்தாள். அத்தனை ஆபத்து முன்னிருந்த போதும் அவன் நடையிலிருந்த திடத்தையும் அலட்சியத்தையும் அவள் பெரிதும் வியந்தாள். "இப்பேர்ப்பட்ட ஒரு திட புருஷனை எப்படியும் காப்பாற்றிவிட வேண்டும். அதனால் என் வாழ்வு நாசமாகி விட்டாலும் பாதகமில்லை என்று தனக்குள் எண்ணமிட்ட அவள், இருவரும் பத்தடி தூரம் நடந்ததும் மீண்டும் பேச்சைத் துவங்கி, "என் யோசனையையும் கொஞ்சம் கேளுங்கள்" என்று கெஞ்சும் குரலில் சொன்னாள்.

உறுதி நிரம்பி நின்ற படைத்தலைவனின் கண்கள் அவளை நோக்கித் திரும்பின. "கொஞ்சமென்ன, உன் யோசனை எதுவா

## வினை விதைத்தலும் வினை அறுத்தலும்

யிருந்தாலும் முழுதும் கேட்கிறேன்" என்ற சொற்கள் அவன் உதடுகளில் இருந்து ஏளனத்துடன் உதிர்ந்தன.

மஞ்சளழகியின் காதலும் பரிதாபமும் கலந்த கண்கள் அவன் கண்களைச் சந்தித்தன. "கேலிக்கு இது சமயமல்ல படைத்தலைவரே," என்று சற்றே கடிந்து கொண்ட மஞ்சளழகியின் சொற்களை இடையே மறித்த இளையபல்லவன் தன் வீர முகத்தில் உறுதியுடன் சிறிது அலட்சியமும் மகிழ்ச்சியும் கலந்துலாவ அவை குரலிலும் தாண்டவமாடச் சொன்னான். "படைத்தலைவரே என்ற கூட்டுச்சொல் தேவையில்லை மஞ்சளழகி, தலைவரே என்றழைத்தாலே போதும்" என்று கூறி தன் கையுடன் கலந்து நின்ற அவள் கை விரல்களைச் சற்று நெறித்துச் சிரிக்கவும் செய்தான்.

பெரும் ஆபத்து சூழ்ந்த சமயத்திலும் சிரிக்கவல்ல அந்த ஆண்மகனை ஆச்சரியத்துடன் பார்த்தாள் மஞ்சளழகி. "ஏன்? படைத்தலைவர் என்ற பெயர் பிடிக்கவில்லையா உங்களுக்கு?" என்று சற்று கோபத்துடன் வினவவும் செய்தாள்.

"பிடிக்கிறது. ஆனால் இந்தச் சமயத்துக்குப் பொருத்தமில்லை" என்றான் இளையபல்லவன். "ஏன் பொருத்தமில்லை?" காரணமில்லாத சீற்றத்துடன் எழுந்தது அவள் கேள்வி.

"இப்பொழுது தலைமை தாங்கி நடத்தப் படை எதுவுமில்லை" என்று குறிப்பிட்டான் இளைய பல்லவன்.

(தொடரும்...)

# நான் வைரமுத்து பேசுகிறேன்... 40

## கண்ணீரைச் சிரிக்க விடுவோம்!

நானும் அழுதிருக்கிறேன். என் விழி நிழலில் இளைப்பாற வந்த துக்கப் பயணிகளுக்கு, நான் கண்ணீர்மரமாகவே மாறியிருக்கிறேன்.

எனது சோகச் சொத்து திருடப்பட்டு விடக்கூடாதே என்பதற்காகத் துக்கக் கடல்களிலே கண்ணீர் முத்துகளைப் பாதுகாக்கின்றேன்.

எனது சோகத் தீயை அணைக்க வந்த கண்ணீர்ப் பானைகள், நெய்க் குடங்களாகவே மாறிவிட்டன.


சோகத்தால் வெளுத்துப போன இதயம் உருகி உருகி உதிர்கிறது. நீங்கள் இதைக் கண்ணீர் என்று என்னை நம்பச் சொல்லுகிறீர்கள்!

நான் வானத்தையும், மேகத்தையும் பார்த்து அழுததை வேண்டுமானால் கண்ணீர் என்று வைத்துக் கொள்ளலாம்.

ஆனால் எனது காதலுக்காக நான் அழுததை மட்டும் கண்ணீர் என்று சொல்ல வேண்டாம்.

அது என் ஆன்மாவின் ரத்தம்.

முத்துக்களின் மேலே பதிந்திருக்கிற பனித்துளிகளை- ரோஜா மொட்டுகளிலே சேகரிப்பதைப் போல், காதல் நினைவிலே வெளிவரும் கண்ணீர்த் துளிகளைச் சேகரிக்கிறேன்.



எல்லோரும் அவரவர்களுக்காக ஒருமுறை அழுது வையுங்கள் இல்லையென்றால், கண்ணீர் அழுது விடக் கூடும்.

அந்தக் கண்ணீர்த் துளிகள் வாயிலே வந்து விழலாம். அப்போது வேண்டுமானால்.

"இனிப்புக் கடலில்" சங்கமிக்கும் "ஓர் உப்பு நதி" என்று நாமதனைச் சொல்லிக் கொள்ளலாம்.

கண்ணகியின் கண்ணீருக்குச் சக்தி இருக்கிறது. சீதையின் கண்ணீருக்குச் சரித்திரம் இருந்தது. எனது கண்ணீருக்குள் ஒரு சங்கீதமே இருக்கிறது.

இந்தக் கண்ணீர்த் துளிகளின் ஓசைகளை நான் "சமாதிச் சத்தங்கள்" என்கிறேன்.

மனித அகராதியில் இந்தக் கண்ணீர் வார்த்தைக்கு எத்தனை பொருள்கள் என்று நான் இன்னும் கணக்குப் பார்க்கவில்லை.

ஆனால் எனது அகராதி முழுவதும் இந்த ஒரு வார்த்தை மட்டும் பொறிக்கப்பட்டிருக்கிறது.

அதற்கரிய அர்த்தம் மட்டுமே அங்கே இல்லை. அதோ! சொர்க்கவாசிகள் அந்த நட்சத்திரங்களெல்லாம் தங்களுக்குப் பசிக்கவில்லையே என்பதற்காக வடித்த கண்ணீர்த் துளிகளாக இருக்கலாம். அதைத் துடைத்துக் கொள்வதற்காகக் கொடுக்கப்பட்ட துண்டுத்துணிகளையும் அவர்கள் வீசியெறிந்துவிட்டார்கள். அவைகளே மேகங்கள்.

இந்தக் கண்ணீர்த் துளிகள். "மனித மரபு"க்கு உட்பட்டு 'உணர்ச்சி யாப்பை மீறி வரும் பொதுக் கவிதைகள்.

துக்க நோயைத் தணிக்கும் ஈர மருந்தென்றுதான் நமது வாழ்க்கை வைத்தியத்தில் இந்தக் கண்ணீர்த்துளி குறிக்கப் பெறுகிறது. ஆனால் இந்த மருந்தின் பயன் உட்கொள்ளப்படுவதில்லை வெளித்தள்ளப்படுவதில்தான்.

இந்தக் கண்ணீர் ஏரி வற்றினால் தான் என் ஆன்மப் படகு நகரும் போலிருக்கிறது.

சோகத்துக்கும் மனிதத்தனத்துக்கும் இடையே நடக்கின்ற இந்தத் தெய்வத்தூது விழிப்பாலங்களைக் கடந்து கன்ன ஏணிகளில் இறங்கி நிலத்திலே தனது இறப்பைப் பிறப்பித்துக் கொள்கிறது. "ஏ கண்ணீரே! ஊமை நினைவுகளின் ஓசையே!" என்று நான் அழைப்பதற்கு முன்னே.

அது என் நெஞ்சப்பசிக்கு நெருப்பு விருந்து படைத்துவிட்டு அணைந்து விடுகிறது போதும் நிறுத்துகிறேன்.

கண்ணீர் வடிப்பதையல்ல எழுதுவதை. ஏனென்றால் எழுத்துக் கண்ணீரைச் சிந்திக் கொண்டிருந்த எனது எழுதுகோலின் மைக்குருதி வற்றி விட்டது.

ஆனால் ஈரம் உலரவில்லை. தோழர்களே! கண்கள் உள்ளவர்களே!

நாமெல்லாம் கொஞ்சம் கண்ணீரைச் சிரிக்க விடுவோம்!

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'நித்திலம் தொகுத்து வழங்கும்'

# சுகமான விடியல்

383

வலம்புரியின் மருத்துவச்சுடர்

## சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகளுக்கு உங்களுக்கான பதில்கள்..

**1. நான் 35 வயதுடைய ஆண். எனது சிறுநீரகத்தை தானமாக வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் எனது குடும்ப வாழ்க்கையில் ஏதேனும் பாதிப்புகள் ஏற்படுமா?... சிறுநீரகத்தை தானமாக வழங்குவது பாதுகாப்பானதா?... ஏதேனும் பின் விளைவுகள் ஏற்படுமா?...**

பொதுவாக சிறுநீரகதானம் செய்யும் முன், தானம் செய்பவருக்கு ஏதேனும் நோய்கள் இருக்கிறதா என பரிசோதிப்போம். அவ்வாறு ஏதேனும் நோய்கள் காணப்பட்டால் நீங்கள் சிறுநீரக தானம் செய்ய முடியாது. பிரதானமாக நீரிழிவு, சிறுநீரகம் தொடர்பான வேறு பிரச்சினைகள், உயர் குருதி அமுக்கம் மற்றும் அதனால் ஏற்பட்ட பாதிப்புகள் இருக்கிறதா என பரிசோதிப்பது வழமை. இன்னொரு விடயம் என்னவென்றால், இலங்கையில் பணத்திற்காக சிறுநீரகத்தை விற்பதோ அல்லது தானம் செய்வதோ தண்டனைக் குரியகுற்றமாகும். அதேபோல், இன்னொருவரின் வற்புறுத்தலால் நீங்கள் சிறுநீரகங்களை தானம் செய்ய முடியாது. தானம் செய்வதால் குடும்ப உறவில் எவ்வித பாதிப்பும் ஏற்படாது. பின்விளைவுகள் ஏதேனும் ஏற்படுமா என்று பார்த்தால், ஏனையவர்களுடன் ஒப்பிடும்போது சிறியளவில் உங்களுக்கு உயர் குருதி அமுக்கம் ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகிறது.

பெரிதாக வேறு எந்த பாதிப்பும் ஏற்படாது. சிறுநீரகத்தை தானமாக வழங்குவது பாதுகாப்பானது தான். ஆனால், சிறுநீரகத்தை தானமாக வழங்கும் போது உங்களுக்கு பொது மயக்க மருந்து வழங்கி, சத்திர சிகிச்சை செய்வதன் மூலமே சிறுநீரகம் வெளியில் எடுக்கப்படும். இந்த பொது மயக்க மருந்தினால் மற்றும் சத்திர சிகிச்சையினால் ஏற்படும் பாதிப்புக்கள் எல்லோருக்கும் பொதுவானவை. சத்திர சிகிச்சைக்கு பின்னரான பாதிப்புகள் என்று பார்த்தால், சத்திர சிகிச்சை செய்த பகுதியில் நோ, கிருமித்தொற்று ஏற்படலாம். வைத்தியசாலையில் 3-5 நாட்கள் வரை இருக்க வேண்டிய நிலை ஏற்படலாம். இது தவிர வேறு எவ்வித பாதிப்பும் உங்களுக்கு ஏற்படாது. நீங்கள் சிறுநீரகங்களை, உங்கள் உறவினருக்கு அல்லது நெருங்கிய நண்பருக்கு மாத்திரமே வழங்க முடியும்.


**2. 60 வயதுடைய பெண்ணாகிய எனக்கு மாலை வேளைகளில் இரண்டு கால்களிலும் வீக்கம் ஏற்பட்டு, காலையில் குறைவடைகிறது. வைத்தியர்கள் எனக்கு பரிசோதனைகளைச் செய்து பார்த்து விட்டு, எந்த பிரச்சனையும் இல்லை என்று கூறுகின்றனர். இதற்கு எந்த வொரு மாத்திரைகளையும் பாவிப்பதில்லை. இது சிறுநீரக நோயின் அறிகுறியா? இதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

கால்களிரண்டும் வீங்குதல் என்பது, பல நோய்களின் அறிகுறியாகும். பொதுவாக இது, சிறுநீரக பிரச்சினைகள் காரணமாக ஏற்படலாம். இது தவிர ஈரல் சம்பந்தமான பிரச்சினைகள், இதய நோய்கள் மற்றும் கால் நாளங்களில் ஏதேனும் பிரச்சினைகள் காணப்படினும் கால் வீக்கம் ஏற்படலாம். கால் வீக்கம் எப்போதும் சிறுநீரக பிரச்சினைகளால் ஏற்படுவதில்லை. சிலசமயங்களில், சில மருந்துகளாலும் கால் வீக்கம் ஏற்படலாம். உயர் குருதி அமுக்கத்திற்காக வழங்கப்படும் Amlodipine என்ற மருந்தின் பக்கவிளைவாகவும் இந்த கால் வீக்கம் ஏற்படலாம். உங்களுக்கு செய்யப்பட்ட பரிசோதனைகளின் முடிவுகள் அனைத்தும் சாதாரணமாக இருப்பதால் நீங்கள் பயப்பட வேண்டிய அவசியமில்லை. பொதுவாக கால் வீங்குபவர்களுக்கு, ஈரல் மற்றும் சிறுநீரகம் சம்பந்தமான பரிசோதனைகளே செய்யப்படுகின்றன. அதோடு இரு கால்களையும் பரிசோதித்து நாளம் சம்பந்தமான பிரச்சினைகள் இருக்கிறதா என பரிசோதித்து, எந்த பிரச்சினையும் இல்லையெனில், கால் வீக்கத்தை குறைப்பதற்கு சில மருந்துகள் கொடுக்கப்படுகின்றன. இதற்கு பெரிதாக பயப்பட வேண்டிய அவசியமில்லை.

**3. 60 வயதான எனக்கு நீரிழிவு நோய் காரணமாக சிறுநீரக பாதிப்பு ஏற்பட்டிருப்பதாகவும், எனது சிறுநீரகம் 45% தொழிற்பாட்டுடனே இருப்பதாகவும் வைத்தியர்கள் கூறியுள்ளனர். நான் மருந்துகளை ஒழுங்காக பாவிக்கிறேன். எனது சிறுநீரக தொழிற்பாட்டை கூட்டுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?**

சிறுநீரக பாதிப்பு திடீரென ஏற்படாது. உங்களுக்கு நீரிழிவு நோய், நீண்ட காலத்திற்கு இருக்குமாயின், அது கட்டுப்பாடற்ற நிலையில் காணப்படுமாயின் சிறிது சிறிதாக உங்கள் சிறுநீரகங்கள் பாதிக்கப்படும். இது தொடர்ச்சியாக காணப்பட்டால் சிறுநீரக செயலிழப்பு ஏற்படும். இந்த பாதிப்பிலிருந்து மீளுவதென்பது இயலாத காரியம். சிறுநீரக தொழிற்பாட்டை அதிகரிக்க எந்த ஒரு சிகிச்சையும் இல்லை. ஆனால், 45% தொழிற்படும் உங்கள் சிறுநீரகங்களை எவ்வாறு பாதுகாப்பாக வைத்திருப்பது என்பது பற்றி நீங்கள் கட்டாயமாக அறிந்திருக்க வேண்டும். முதலாவதாக, உங்கள் குருதி அமுக்கம், நீரிழிவு என்பன கட்டுப்பாட்டினுள் இருக்க வேண்டும். Brufen, Voltaren போன்ற வலிநிவாரண மாத்திரைகளை எடுக்கும் போது, உங்கள் சிறுநீரகத்திற்கு போகும் இரத்தத்தின் அளவு குறைந்து சிறுநீரக பாதிப்பு மேலும் அதிகரிக்கும். இவ்வாறான மருந்துகள் எடுப்பதை தவிர்த்துக் கொள்ள வேண்டும். உங்களுக்கு சிறுநீரில் கிருமித்தொற்று வருமாயின், அது உங்கள் சிறுநீரகங்களை சிறிது சிறிதாக பாதிக்கும். எனவே, இவற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்க வேண்டும். இவ்வாறான பாதுகாப்பாக இருந்தால், சிறுநீரகம் தொடர்ந்தும் பாதிப்படைவதை தடுக்கலாம். சிறுநீரகம் முற்றாக பாதிப்படைந்தால், சிறுநீரகத்தை மாற்ற வேண்டி இருக்கும் அல்லது தொடர்ந்து இரத்த சுத்திகரிப்பு செய்ய வேண்டி இருக்கும். உங்களுக்கு நீரிழிவு அல்லது உயர் குருதி அமுக்கம் காணப்படுமாயின், ஆரம்பத்திலேயே சிறுநீரக பரிசோதனைகளை மேற்கொண்டு, சிறுநீரக பாதிப்பு இருக்கிறதா என்று பார்த்து அதற்கான சிகிச்சைகளை மேற்கொள்வதன் மூலம் சிறுநீரகம் தொடர்ந்தும் பாதிப்படைவதை தடுக்கலாம். முற்றாக சிறுநீரகம் செயலிழக்க முதல் அதனை கண்டறிந்து தடுக்க வேண்டும்.

**Dr.வே.பவந்தன்,**
**சிறுநீரக வைத்திய நிபுணர்.**




## மரம் என்னும் மருத்துவச் சுடர்

எமது சுகத்தையும் சுற்றாடலையும் காத்து, சூழலிலுள்ள அசுத்தக்காற்றை வடிகட்டி சுத்திகரித்து சுவாசக்காற்றான ஒட்சிசனை அள்ளி வழங்கி எமது சுகம் காத்து சத்துணவையும் மருத்துவ மூலிகைகளையும் தந்து, நிழலையும் குளிர்ச்சியையும் மழைவீழ்ச்சியையும் கொடுத்து, நோய்த்தாக்கங்களிலிருந்து மனிதனைக் காத்து மலர்களினால் சுற்றாடலுக்கும் மனதுக்கும் மலர்ச்சியைக் கொடுத்து, மனச்சஞ்சலங்களை நீக்கி, எமது மண்ணை கடல் விழுங்க விடாது மண்ணரிப்பில் இருந்து காத்து, எமது உடல், உள, சமூக, ஆன்மிக நன்னிலையைக் காத்து நிற்கும் மரம் என்ற மருத்துவ சுடர்கள் பலவற்றை வீடுதோறும் ஏற்றி அந்தச் சுடர்களை வளர்த்து ஆரோக்கிய வாழ்வியலில் நாமும் பங்கு கொள்வோம்.

**Dr.சி.சிவன்சுதன்**
**பொது மருத்துவ நிபுணர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடும் விமர்சனங்களுக்கு மத்தியில் அவுஸ்திரேலியா செல்லவுள்ள ஜனாதிபதி



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் தனது 19 ஆவது வெளிநாட்டு விஜயமாக அவுஸ்திரேலியாவை தெரிவு செய்துள்ளார். அவுஸ்திரேலியாவின் பேர்த் நகரில் காலநிலை மாற்றம் தொடர்பான மாநாடு எதிர்வரும் பெப்ரவரி மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இந்நிலையில் ரணில் விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என கொழும்பு ஊடகமொன்று தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி ரணில் ஆட்சிக்கு வந்து 17 மாதங்களில் 18 தடவைகள் வெளிநாடு சென்றுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஜே.வி.பி தலைவர் அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் பாராளுமன்றத்திலும் வெளியிலும் கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது (5-6)

# மாணவர்களுக்கான உணவு விலை அதிகரிப்பு தொடர்பில்

## கல்வி அமைச்சு ஆராய்வு

(கொழும்பு)

பாடசாலை மாணவர் ஒருவரின் உணவுக்காக தற்போது வழங்கப்படும் எண்பத்தைந்து ரூபாவை நூற்றுபதினைந்து ரூபாவாக அதிகரிப்பது தொடர்பில் கல்வி அமைச்சினால் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய நிலையில் பொருட்களின் விலை அதிகரிப்பு காணப்படுவதால் குறித்த தொகைக்குள் உணவை வழங்க முடியாது என தெரிவிக்கப்பட்டதற்கு அமைய இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

அண்மையில் இந்த தொகை அதிகரிப்பு தொடர்பான கலந்துரையாடல் அமைச்சில் இடம்பெற்றதுடன் இதில் நிதியமைசசின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். ஒரு வேளை உணவுக்கு நூற்றுபதினைந்து ரூபா வழங்கினால் போதும் எனவும், சந்தையில் அரிசி, பருப்பு உள்ளிட்ட உலர் உணவுப் பொருட்களின் விலைகள் மீள்பரிசீலனை செய்யப்பட்டு அடுத்தவாரம் இறுதித் தீர்மானம் எடுக்கப்படும் எனவும் அமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் , இதுவரை பத்து லட்சம் மாணவர்கள் மதிய உணவு திட்டத்தின் பலனை பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

# போதைப்பொருளுக்காக சிறுநீரகம் விற்ற நபர் கைது

(கொழும்பு)

போதைப்பொருளை கொள்வனவு செய்வதற்காக சிறுநீரகத்தை விற்ற நபர் ஒருவர் காத்தான்குடி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

32 வயதுடைய குறித்த சந்தேகநபரிடம் இருந்து ஐஸ் ரக போதைப்பொருளும் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சந்தேகநபரின் சிறுநீரகம் கொழும்பில் வைத்து அகற்றப்பட்டுள்ளதுடன், பெறப்பட்ட பணத்தொகை தொடர்பில் இதுவரை தகவல் வெளியாகவில்லை. இந்தநிலையில் சந்தேகநபர் மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டமையை அடுத்து அவரை எதிர்வரும் 6ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைககுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. (5-6)

# கற்பிட்டியில் 1856 சங்குகளுடன் ஒருவர் கைது



(கொழும்பு)

கற்பிட்டி, இப்பந்தீவு பகுதியில் சட்டவிரோதமான முறையில் சங்குகளை பிடித்த மூவர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் மூவரும் கற்பிட்டி பகுதியைச் சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகிறது.

வடமேற்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பல் விஜய கடற்படையினரால் கற்பிட்டி இப்பந்தீவு கடற்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து சட்ட விரோதமாக பிடிக்கப்பட்ட 1856 சங்குகளும் டிங்கி இயந்திர படகு ஒன்றும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன. (5-6)

# உமா ஓயா திட்டம் இறுதிக் கட்டத்தை எட்டியுள்ளது

## நீர்ப்பாசன இராஜாங்க அமைச்சர்

(கொழும்ப)

உமா ஓயாதிட்டம் நிறைவடையும் தருவாயில் உள்ளதாகவும் அடுத்த மாத தொடக்கத்தில் 120 மெகாவாட் கொள்ளளவை அமைப்பில் செலுத்தத் தயாராக இருப்பதாகவும் நீர்ப்பாசன இராஜாங்க அமைசச்ர் ஷஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

நீர்ப்பாசன அமைச்சின் கீழ் தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் பல முக்கிய பல்நோக்கு அபிவிருத்தி முயற்சிகளில் ஒன்றாக உமா ஓயா திட்டத்தை இராஜாங்க அமைச்சர் எடுத்துரைத்தார். உமா ஓயா உட்பட இந்த திட்டங்களில் பல ெளிநாட்டுக்கடன் உதவியை நம்பி நிர்மாணப் பணிகள் நிறைவடையும் தருவாயில் இருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

உமா ஓயாதிட்டம் என்பது தேசிய கட்டத்தை உயர்த்துவது மட்டுமல்ல. இது குறிப்பிடத்தக்க விவசாய நன்மைகளையும் உறுதியளிக்கிறது.

திட்டத்தின் நீர்ப்பாசனக் கூறுகள் ஆன்லைனில் வருவதால் தற்போதுள்ள 4500 ஹெக்டேயர் நெற்பயிர்கள் மற்றும் 1500 ஹெக்டேயர் புதிய நிலங்கள் நீரைப் பெறும். இது நாட்டின் விவசாய உற்பத்தியை கணிசமாக அதிகரிக்கும் என தெரிவித்தார். (5-6)

# இன்று ஒரு தகவல் 19



தென்கச்சி கோசுவாமிநாதன்

## நட்பும் பகையும்

ஒரு பக்தன் காட்டிலே ரொம்பவும் கடுமையாக தவம் பண்ணிக் கொண்டிருந்தான். கடவுள் உடனே அவனுக்கு முன்னாடி வந்து காட்சி கொடுத்தார். கையிலே கதாயுதம் வேறு வைத்திருந்தார்.

பக்தா! உன்னுடைய பக்தியை மெச்சினேன். உனக்கு என்ன வரம் வேணுமோ கேள் தருகிறேன் என்றார். இப்படிச் சொன்னதுக்கு பின்பு பக்தன் சும்மா இருப்பானா?

பகவானே என்னுடைய முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிற சக்திகளை உன்னுடைய கதாயுதத்தாலே தாக்கி, வீழ்த்தி அழித்துவிட வேண்டும். இதுதான் என்னுடைய வேண்டுகோள் அப்படி என்றான்.

பகவான் இதைக் கேட்டார். முகத்திலே புன்னகை. அதுக்கென்ன அப்படியே செய்து விடுகிறேன். அப்படி என்று சொல்லி விட்டு மறைந்து விட்டார். கொஞ்சநேரம் ஆகிவிட்டது. ஆண்டவன் கையிலே இருந்த கதாயுதம் வேகமாக வந்தது.

வரம் கேட்டானே பக்தன், அவன் மார்பையே நோக்கி வந்து தாக்க ஆரம்பித்து விட்டது. அப்படியே தடுமாறி கீழே விழுந்துவிட்டான்.

இது ஏதுடா வரம் கேட்டது வம்பாப் போச்சே என்று நினைக்க ஆரம்பித்து விட்டான்.

ஐயையோ ஆண்டவனே! என்னப்பா இது. என்னுடைய முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும் பகைவனையல்லவா தாக்கச் சொன்னேன்.

நீ ஞாபகமறதியால் ஏதாவது பண்ணிவிட்டியா? உன்னுடைய கதாயுதம் என்னையே வந்து தாக்குதே. குறி தவறிப் போச்சுதா. அப்படி என்று கத்த ஆரம்பித்து விட்டான் பக்தன். கடவுள் மறுபடியும் காட்சி கொடுத்தார். பக்தனைப் பார்த்துச் சொன்னார்.

பக்தா! நீ கேட்டபடி தான் நான் ஆயுதத்தை வீசினேன். ஞாபகமறதியெல்லாம் ஒன்றும் கிடை யாது. குறி தவறியும் அது வந்துவிடவில்லை. சரியாகத் தானே வந்திருக்கு. மற்றவர்களைத் தாக்கணும், வீழ்த்தணும், அழிக்கணும் என்று நினைக்கிற உன் மனம் தான் உனக்குப் பகைவன், எதிரி எல்லாம்.

உன் முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கிறது நீயே தான். அதனாலே தான் இது உன்னையே தாக்கியிருக்கு. அப்படி என்று கடவுள் சொன்னாராம்.

இதிலே இருந்து நமக்கு எதிரி யார்? என்பதை நன்றாக புரிந்து விட்டோம் இல்லையா? நமக்கு நண்பர்கள் யார்?

நமக்குக் கிடைக்கிற நண்பர்களை மூன்று வகையாகப் பிரித்து விடலாம். பனை மரம், தென்னை மரம், பாக்கு மரம் இப்படி. பனை மரம் இருக்கே இது தானா முளைக்கும், தானாகவே தண்ணீர் குடிக்கும், தானாகவே வளரும், நமக்கு பலன் கொடுக்கும். நமக்கு வலிய வந்து உதவி செய்யும் நண்பர்கள் இந்த ரகம்.

தென்னை மரம் இருக்கே இதுக்கு எப்பவாவது தண்ணீர் விட்டால் போதும் வளர்ந்து விடும். இது மாதிரி எப்பவாவது உதவி செய்தால் அதை ஞாபகம் வைத்திருந்து நமக்கு உதவி செய்கின்ற நண்பர்கள் தென்னை மரம் மாதிரி.

பாக்கு மரம் இருக்கே இதற்கு தினமும் தண்ணீர் விட்டால் தான் வளரும். பலன் கொடுக்கும். இது மாதிரி தினமும் உதவி செய்தால் தான் நம்மை கவனிக்கிற நண்பர்கள் உண்டு. இவர்கள் எல்லாம் பாக்கு மரம் மாதிரி. ஆக `நண்பர்களை இந்த வகையில் அடையாளம் கண்டு கொண்டு அதற்கு தகுந்த மாதிரி நடக்க வேண்டும்.

ஆனால் இந்தக் காலத்தோட கோலம் எப்படி என்றால் நாம நல்லது என்று நினைத்து இன்னொருவருக்கு உதவி செய்தால் கூட உபத்திரவத்திலே மாட்டிக் கொள்வது போல் ஆகிவிடுகிறது.

ஒருத்தர் வந்தார். சேர் ஆற்று வெள்ளத்திலே நான் தத்தளித்துக் கொண்டு இருந்த போது என்னைக் காப்பாற்றினது நீங்கதானா சேர் என்று கேட்டார்.

அதற்கு இவர் சொன்னார். ஆமாம் அதனாலே என்னப்பா அது என் கடமை. இதுக்குப் போய் நன்றியெல்லாம் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை என்றார்.

இதுக்கு அந்த ஆளு அதுக்கில்லை சேர் சட்டைப் பையிலே ஒரு 25 காசு வைத்திருந்தேன். அதைக் காணவில்லை . அதற்காகத் தான் கேட்டேன் என்றாராம். இது எப்படி?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பல்லவராயன்கட்டு - வேரவில் வரையான வீதி புனரமைத்தால் மட்டுமே

## நோயாளர் காவுவண்டியை சேவையில் ஈடுபடுத்த முடியும்

(அக்கராயன்)

கிளிநொச்சி வேரவில் பிரதேச மருத்துவமனைக்கு அம்புலன்ஸ் சேவையில் இல்லாதது தொடர்பில் நேற்று முன்தினம் மருத்துவமனையில் அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு மருந்துவர் இசுறு தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம் பெற்றது.

பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து வேரவில் மருத்துவமனை வரை வீதி சீரின்மையால் குறித்த வீதியூடாக அம்புலன்ஸ் பயணிக்கமுடியாத நிலை காணப்படுகிறது.

வீதியினை புனரமைப்பதன் மூலமே அம்புலன்ஸை சேவையில் ஈடுபடுத்த முடியும் என பொறுப்பு மருத்துவரால் தெரிவிக்கப்பட்டது. (6-350)



பாடசாலை சமூக கரும்பு நடுகை விழா நேற்று முன்தினம் கிளிநொச்சி கலைமகள் வித்தியாலயத்தில் வித்தியாலய முதல்வர் பெ.கணேசன் தலைமையில் இடம்பெற்றது.

(படம்: தேவானந்தம், கிருஷ்ணகுமார்.)

## குன்றுங் குழியுமான வீதிகளை புனரமைக்க நடவடிக்கை

(அக்கராயன்)

பல்லவராயன்கட்டுச் சந்தியில் இருந்து வேரவில் வரையான வீதியில் காணப்படுகின்ற குழிகளை மூடுவது என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றியத்தின் ஒழுங்குபடுத்தலில் இவ்வேலை இடம்பெற உள்ளது. இது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முன்தினம் இடம்பெற்றது. பல்லவராயன் கட்டுச் சந்தியில் இருந்து பொன்னாவெளி பாலாவி வரை ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியில் தொடங்கப்பட்ட வேலை கைவிடப்பட்டு இரு ஆண்டுகள் கடந்த நிலையில் தற்போது பெய்த பெரும் மழையினால் கரியாலை நாகபடுவான் குளத்தின் வான் வெள்ளம் பல்லவராயன்கட்டுச் சந்திக்கும் வேரவிலுக்கும் இடையில் வீதியினை மூடிப் பாய்ந்ததன் காரணமாக வீதியில் பல இடங்களில் குழிகள் ஏற்பட்டுள்ளன.

இதனை மூடுவதற்கு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காததன் காரணமாக பொன்னாவெளி அனைத்து மக்கள் ஒன்றியத்தின் ஒழுங்குபடுத்தலில் குழிகளை மூடி வீதியில் வாகனங்கள் பயணிக்க கூடிய விதத்தில் தற்காலிக புனரமைப்பினை மேற்கொள்வது வேரவில், கிராஞ்சி, வலைப்பாடு, பொன்னாவெளி, பாலாவி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களே இப்பணியில் ஈடுபடுவது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. (6-350)

## முச்சக்கரவண்டி-பாரவூர்தி விபத்தில் மூவர் உயிரிழப்பு

(கொழும்பு)

நாரம்மல - கிரியுல்ல பிரதான வீதியில் கிவுல் கல்ல வளைவுக்கு அருகில் நேற்று காலை இடம்பெற்ற விபத்தில் மூவர் உயிரிழந்துள்ளதுடன் மற்றுமொருவர் காயமடைந்துள்ளார்.

காயமடைந்த நபர் குருநாகல் போதனா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

முச்சக்கர வண்டியொன்று பாரவூர்தியுடன் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

முச்சக்கரவண்டியில் நால்வர் பயணித்த நிலையில் மூவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளதுடன் பாரவூர்தி சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என பொலிஸார் தெரிவித்தனர். (6)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3025

கிருத்திகா




மிதுளன்




கலைவாணன்




சிவோதயன்




தனுசியா




அபிலாசன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஏன்? எதற்கு? எப்படி? எனும் கேள்விகளிலிருந்து விடுபடுவதே சூழ்நிலைகளை சுலபமாய்க் கையாளும் வழி.

– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## அகால மரணங்களை தடுக்க முடியாதா?

வட பகுதியில் நோயல்லாத மூன்று முக்கிய காரணங்களால் அருமந்த மனித உயிர்கள் நாள்தோறும் காவு கொள்ளப்படுகின்றன.

தற்கொலை, விபத்து, போதைவஸ்து பாவனை.

மேற்குறித்த மூன்று காரணங்களால் நாள்தோறும் உயிர்கள் பலியாகுகின்ற போதிலும் அதுகுறித்து நாம் இன்னமும் மௌனமாகவே இருக்கின்றோம்.

அதேநேரம் எங்கள் யாழ்ப்பாண மண்ணில் பல்லைக்கழகம் உண்டு. அதில் மருத்துவபீடம் உள்ளது. உளவியல், சமூகவியல் துறைகள் இயங்குகின்றன. ஆனாலும் தற்கொலைகள் தணியவில்லை – தணிக்கப்படவில்லை.

இதற்கும் மேலாக, போக்குவரத்துக் கண்காணிப்பு பொலிஸ் பிரிவு, தனியார் ஊர்திச் சங்கங்கள், கனரக வாகன உரிமையாளர் அமைப்புகள் என்பன உயிர்ப்போடு உள்ளன.

தவிர, வாகன சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு முன்பான பயிற்சிகள், வகுப்புகள், பரீட்சைகள், நேர்முகத்தேர்வுகள், செய்முறைகள் என்பதான மிக நீண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்படுகின்றன. இதையும் கடந்து வீதிச் சமிக்ஞைகள், அறிவுறுத்தல்கள், வேகத்தின் அளவுகள், வேகக்கட்டுப்பாடுகள் என்பனவும் அமுலில் உள்ளன. ஆனாலும் விடிந்தால் விபத்து மரணங்களே எங்கள் செவிகளுக்குக் கிடைக்கின்ற அகாலச் செய்திகள்.

இந்தச் செய்திகள் நாளுக்கு நாள் பெருகிப் போவதுதான் பெருந்துன்பம்.

இதேபோன்று மருத்துவமனைகள், ஆற்றுப்படுத்தும் நிலையங்கள், உளசமூக சேவைகள், ஆன்மீக பீடங்கள், மதகுருமார்கள், சமயப்போதனைகள், அறநெறிப் பாடசாலைகள், ஆலயங்கள், திருவிழாக்கள், சமூக அமைப்புகள் அடேங்கப்பா எத்தனை எத்தனை.

இவ்வாறாக சமூகக் கட்டுமானங்கள் பல்கிப் பெருகி இருக்கின்ற போதிலும் எங்கள் இளைஞர்கள் போதைக்கு அடிமையாகி, வாழ வேண்டிய வயதில் திடீர் மரணத்தைத் தழுவுகின்ற பரிதாபம் நாள்தோறும் நடந்தாகின்றன.

ஆம், மேற்குறிப்பிட்ட மூன்று காரணங்களாலும் தினந்தோறும் நடக்கின்ற உயிரிழப்புகள் வெறும் செய்தியாக நம்மிடையே வந்து போகிறது.

ஆனால் உயிரிழந்தவர்களின் குடும்பங்களை ஒருகணம் நினைத்துப் பாருங்கள்.

பிள்ளைகளின் கதி என்ன? பெற்றவர்களின் துயரம்தான் எத்தனை, குடும்ப வருமானத்தின் இழப்புகள்.

அந்தோ! உயிரிழப்பு ஒரு கணமாயினும் அதுதருகின்ற துன்பமும் வேதனையும் எத்தனையோ பேருடைய வாழ்க்கையை நிர்மூலமாக்கிவிடுகின்றன.

ஆகையால், நம் மண்ணில் நடக்கின்ற அகால மரணங்களைத் தடுத்து நிறுத்த யாரேனும் முன்வரமாட்டார்களா? இதுதான் நம்மிடம் இருக்கக்கூடிய மிகப்பெரும் ஆதங்கம்.

ஏலவே குறிப்பிட்ட அமைப்புக்கள் தற்கொலை மரணத்தைத் தடுக்க சாத்தியமான திட்டங்களை அமுல்படுத்தக்கூடாதா?

போதை ஒழிப்பை மேற்கொள்ள இளைஞர் அணியை உருவாக்க இயலாதா?

விபத்து மரணங்களைத் தடுத்து நிறுத்தும் பொருட்டு போக்குவரத்துப் பொலிஸாரும் வாகன சேவையாளர் அமைப்புகளும் சாரத்தியப் பயிற்சி நிறுவனங்களும் நடவடிக்கை எடுக்க முடியாதா?

இதைச் செய்யாத நாம், எங்கள் இனம் பற்றிக் கதைத்து என்ன பயன்.

ஆக, முதலில் அகால மரணங்களை தடுக்க மாநாடு கூடுங்கள். கூடி ஆராயுங்கள். உரிய அமைப்புகளை உருவாக்குங்கள். இதைச் செய்வதுதான் சமூக அக்கறை எனப்படும்.

## குளங்களை புனரமைக்க ரூ.1000 மில்லியன் ஒதுக்கீடு

(கொழும்பு)

நாட்டில் உள்ள சிறிய குளங்கள் மற்றும் ஏரிகளை புனரமைப்பதற்காக அரசாங்கம் 1,000 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது. நாட்டில் உள்ள 17,000 சிறிய நீர்ப்பாசன முறைமைகளை புனரமைப்பதற்காக கம நல அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக இந்த ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட 1,000 மில்லியன் ரூபாய் மூலம் இந்த சீரமைப்பு பணிகள் கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட நிலையில் விவசாய திணைக்களத்தின் பூரண மேற்பார்வையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சுமார் 1,100 குளங்களின் நிர்மாணப் பணிகள் தற்போது நிறை வடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (6)

## மேலும் 818 பேர் கைது

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் விசேட சோதனை நடவடிக்கையின் கீழ், நேற்று அதிகாலையுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரத்தில் 818 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் போதைப் பொருள் குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய 554 பேரும் குற்றப் புலனாய்வு பிரிவினால் அனுப்பப்பட்ட பட்டியலில் உள்ள 264 பேரும் அடங்குவதாக பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அத்துடன், கைதானவர்களில் போதைப்பொருட்களுக்கு அடிமையான ஒருவர் புனர்வாழ்வு மையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என குறித்த அமைச்சு தெரிவித்துள்ளது. (6)

## கடனை திருப்பி செலுத்த முடியாதவர்களுடன் பேச்சுவார்த்தை

### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

அமெரிக்க டொலர் பத்திரங்களை வைத்திருப்பவர்களிடம், பெற்றுக்கொண்ட கடனை திருப்பிச் செலுத்த முடியாத நிலையில், அவர்களுடன் இரண்டு மாதங்களுக்குள் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் தெரிவித்துள்ளார்.

டொலர் பத்திரக்காரர்களுடன் கடன் மறுசீரமைப்பு விடயத்தில் இன்னும் இலங்கை தெளிவான நிலைப்பாட்டை எடுக்கவில்லை என்று குற்றச்சாட்டுக்கு பதிலளிக்கும் போதே மத்திய வங்கியின் ஆளுநர் இந்த தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்த டொலர் பத்திரங்களை வைத்திருப்பவர்களிடம் இருந்து பெற்றுக் கொண்ட 13 பில்லியன் டொலர் கடனை மறுசீரமைப்பது குறித்து அடுத்த இரண்டு மாதங்களுக்குள் ஒரு உடன்பாட்டை எட்ட வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (5-6)

## இசை ஆராதனை

காரைநகர் கிழவன்காடு கலாமன்றம் நடாத்தும் சற்குரு ஸ்ரீ தியாகராஜசுவாமிகளின் 177 ஆவது இசை ஆராதனை விழாவானது எதிர்வரும் செவ்வாய்க்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் காரைநகரில் அமைந்துள்ள கிழவன்காடு கலாமன்ற மனோன்மணி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் கலந்துகொள்ள விரும்புபவர்களுக்கான இலவச போக்குவரத்து சேவைகள் கலாமன்ற யாழ் கிளையில் இருந்து குறித்த தினத்தன்று பி.ப 3.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது. (ம-7)

## பரமபிதா காட்டிய பாதை

### துட்டத்தனத்தை தூயஆவியால் வெல்வோம்

இயேசு தீயஆவி பிடித்திருந்த ஒருவரை குணமாக்கியதை விளக்குகின்றது இன்று தரப்படும் பைபிளின் மாற்கு நற்செய்தி 1:21-28பகுதி. அதுவும் அதிகாரத்தோடு அலகையை அதட்டி துரத்தியதைக் விளக்குகின்றது. "வாயை மூடு, இவரை விட்டு வெளியே போ" என்று இயேசு அதனை அதட்டினார். தொழுகைக்கூடத்தில் தீயஆவி பிடித்திருந்த ஒருவர் இருந்தார். அவரைப் பிடித்திருந்த ஆவி, இயேசுவிடம் கேட்ட கேள்வியும் இது: "நாசரேத்து இயேசுவே, உமக்கு இங்கு என்ன வேலை? எங்களை ஒழித்துவிடவா வந்தீர்? நீர் யார் என எனக்குத் தெரியும். நீர் கடவுளுக்கு அர்ப்பணமானவர்." இது நடுக்கமுற்ற ஒரு தீயஆவியின் அதட்டலான கேள்வி போலத் தோன்றினாலும் தொடர்ந்து வருகின்ற செய்தி ஒரு விசுவாச அறிக்கை. ஆம், அலகையே இயேசுவை கடவுளுக்கு அர்ப்பணமானவர் என்று அறிக்கையிடுகின்றது. அது மட்டுமல்ல, கடவுளுக்கு அர்ப்பணமான இயேசுவின் வேலைகளில் ஒன்று தீமைகளை ஒழிப்பது என்பதையும் அது அறிக்கையிடு கின்றது. இயேசுவின் அர்ப்பண வாழ்வின் இலக்கை சீடர்கள் அனைவரின் முன்னிலையில் விசுவாச அறிக்கையாக தீயஆவி வெளிப்படுத்துகின்றது என்றே நாம் பொருள் கொள்ளலாம்.

தீயஆவிகளைப் பற்றி பலவிதமான நம்பிக்கைகளும் கதைகளும் யூத மக்களிடையே அன்று உலாவி வந்தது. நாமும் இந்த தீய ஆவிகளைப் பற்றிய கதைகளை நம்பலாம், நம்பாமல் இருக்கலாம். நாம் நம்புகிறோமோ, இல்லையோ, இயேசு வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த மக்கள் முழுமையாக நம்பினார்கள். தீயஆவியின் உள்ளார்ந்த நோக்கம் எங்களுக்கு செழிப்பைத் தருவது அல்ல. ஒருவேளை ஓரிரு நாட்கள், அல்லது சில காலங்களுக்குச் செழிப்பைத் தரலாம். ஆனால் இறுதியில், எங்களை அழிப்பதே தீய ஆவியின் திட்டமாகும். கடவுள் விரும்பும் ஒவ்வொருவரையும் அலகை வெறுக்கிறான். தீயஆவி, வானதூதர் ஒருவ ரின் ஒளியைப் போல வரலாம். சிறந்த ஒரு நண்பர் போல வரலாம். அடுத்தவரின் கணவர் -மனைவி போல் வரலாம். எங்கள் உடல், மனம் மற்றும் எல்லாவற்றிற்கும் நிறைந்த மகிழ்ச்சிகளை சிறிது நாட்கள் தருகிறது. ஆனால் இறுதியில் அலகையின் நோக்கம் முழுமையான அழிவைத் தருவதே. எனவே அனைத்து மனிதர்களும் அலகையுடன் நட்பு கொள்ளாதீர்கள். அலகையின் நோக்கம் வெறுப்பும் பிரிவினைகளும் எங்களை அழிப்பதுமே. அலகையின் தாரக மந்திரமே துட்டத்தனம் தான். முதலில் வந்து திருடுவான், பின்னர் கொல்வான் அதன் பின்னர் எங்களை அழித்துவிடுவான். முதலில் வந்து எமது மகிழ்சிகளைத் மெதுவாகத் திருடுவான். பின்பு எமது உணர்வுகளைக் கொலை செய்வான். பின்பு முழுவதுமாக குடும்பம் முழுவதையும் சின்னாபின்னமாக அழித்து விடுவான். இச்செயற்பாட்டை நாம் இயேசுவின் துணைகொண்டு கருத்தாய் ஆராய்ந்து வெற்றி கொள்ள வேண்டும். இல்லையேல் ஆபத்து பயங்கரமானது.

இப்பகுதியின் மூலமாக நாம் கற்றுக்கொள்ளும் செய்தி: கடவுளின் வல்லமையின் மீது நாம் நம்பிக்கை வைக்க வேண்டும். இன்றைய சமூகத்தில் சாத்தான் அனைவரையும் ஆட்டிப் படைக்கின்றான். ஆலயத்திற்கு செல்கிறவர்களும் ஆண்டவரை நம்பிக்கையோடு வழிபடுகிறவர்களும் தீய ஆவிகள் மீது, அவற்றின் அதிகாரத்தின் மீது நம்பிக்கை வைக்கிறார்கள். ஆனால், நமது ஆண்டவர் தீயஆவிகளின் மீதும் தனது அதிகாரத்தை நிலைநாட்டுகிறார். கடவுளின் வல்லமை பெரியது. கடவுளின் வல்லமை மீது நாம் நம்பிக்கை வைப்போம். அது தீயஆவியை வெல்லும். கடவுள் ஆற்றல் நிறைந்தவர், அதிசயங்கள் புரியக்கூடியவர் என்பதில் நாம் உறுதியாக இருக்க வேண்டும். அந்த உறுதி தீயஆவிகளுக்கு எதிரான நமது போராட்டத்தில் நமக்கு வெற்றி தேடித்தரும்.

21ஆம் நூற்றாண்டில் மனிதர்கள் போதனைகளை விட சாதனைகளுக்கும் அறிவுரைகளைவிட வாழ்க்கை அனுபவங்களுக்கும் அதிக அழுத்தம் தருகின்றனர். இந்த மனநிலை இன்று எல்லோருக்கும் இருக்கிறது. இயேசுவின் காலத்திலும் அவரது போதனைகளைக் கேட்ட மக்கள் வியந்தனர். காரணம் அவரது போதனை அதிகாரம் நிறைந்ததாக இருந்தது. அந்த அதிகாரத்தை இயேசுவின் செயல்களிலும் அவர்கள் கண்டனர். இயேசு தீயஆவியிடம் "வாயை மூடு. இவரைவிட்டு வெளியே போ" என்று அதிகாரத்தோடு அதட்டி வெளியேற்றினார். எனவேதான், மக்கள் திகைப்புற்று, "இது என்ன? இது அதிகாரம் கொண்ட புதிய போதனையாய் இருக்கிறதே! என்று வியந்தனர். இயேசுவின் போதனை அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இயேசுவின் செயல்கள் அனைவரையும் திகைப்புறச் செய்தது. நமது சொற்கள் அதிகாரம் கொண்டதாக அமைய வேண்டுமென்றால், மற்றவர்களை திகைப்புற செய்ய வேண்டுமானால் நமது சொற்களுக்கும் செயல்களுக்கும் முரண்பாடு இல்லாமல் இருக்க வேண்டும். நமது சொற்கள் நமது செயல்களில் எதிரொலிக்க வேண்டும்.

**ம.பிரான்சிஸ்க்,**
**கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வதேச நீதிமன்ற தீர்ப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்த நெதன்யாகு

(காசா)

**காசாவில் இனப்படுகொலையை தவிர்க்க இஸ்ரேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சர்வதேச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்த நிலையில் அந்த தீர்ப்பிற்கு இஸ்ரேல் பிரதமர் எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.**






காசா முனை மீது இஸ்ரேல் நடத்தி வரும் போர் மூன்று மாதங்களுக்கு மேலாக நீடித்து கொண்டிருக்கிறது. காசாவை நிர்வகித்து வரும் ஹமாஸ் அமைப்பினரை அழிப்பதாக கூறி தீவிர தாக்குதல் நடத்தப்பட்டு வருகிறது. ஆனால் போரில் குழந்தைகள், பெண்கள் உட்பட 26 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

காசாவில் இஸ்ரேல், இனப்படுகொலையில் ஈடுபடுவதாக ஐ.நாவின் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் தென்ஆபிரிக்கா வழக்கு தொடர்ந்தது. இதில் விசாரணை நடைபெற்று வரும் நிலையில் நேற்று முன்தினம் சர்வதேச நீதிமன்றம் இடைக்கால தீர்ப்பு வழங்கியது.

அதில், காசாவில் இனப்படுகொலையை தவிர்க்க இஸ்ரேல் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சர்வதேச நீதிமன்றம் உத்தரவிட்டது. இந்நிலையில் சர்வதேச நீதிமன்ற தீர்ப்புக்கு இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு எதிர்ப்பு தெரிவித்துள்ளார்.

இஸ்ரேல் மீது சுமத்தப்பட்டுள்ள இனப்படுகொலை குற்றச்சாட்டு தவறானது மட்டுமல்ல, அது மூர்க்கத்தனமானது. எல்லா இடங்களிலும் உள்ள கண்ணியமான மக்கள் அதை நிராகரிக்க வேண்டும். ஒவ்வொரு நாட்டையும் போலவே இஸ்ரேலுக்கும் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான ஒரு உள்ளார்ந்த உரிமை உள்ளது.

இந்த அடிப்படை உரிமையை இஸ்ரேலுக்கு மறுப்பது மோசமான முயற்சி. எங்கள் நாட்டைப் பாதுகாக்கவும் மக்களைப் பாதுகாக்கவும் தேவையானதை தொடர்ந்து செய்வோம்.

ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் தொடர்ந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளும். இஸ்ரேலின் போர் பாலஸ்தீன மக்களுக்கு எதிரானது அல்ல. ஹமாஸ் அமைப்பிற்கு எதிரானது. தொடர்ந்து மனிதாபிமான உதவிகளை வழங்குவோம். பொதுமக்களை ஹமாஸ் அமைப்பினர் மனிதக்கேடயங்களாக பயன்படுத்துகிறார்கள்.

ஆனால் நாங்கள் பொதுமக்களுக்கு தீங்கு விளைவிக்காமல் இருக்க எங்களால் முடிந்த அனைத்தையும் செய்வோம் எனத் தெரிவித்தார். (5-6)

# நேட்டோ அமைப்பில் சுவீடன் இணைய துருக்கி ஒப்புதல்




(பிரசெல்சு)

நேட்டோ அமைப்பில் சுவீடன் நாட்டுக்கு அங்கத்துவத்தை வழங்க துருக்கி உத்தியோகபூர்வமாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

ஹங்கேரியும் ஒப்புதல் வழங்கினால், சுவீடன் நேட்டோ அமைப்பின் அங்கத்துவ நாடாக மாறிவிடும்.

கடந்த ஒன்றரை ஆண்டுகளாக நிலுவையில் இருந்த யோசனைக்கு துருக்கி பாராளுமன்றம் கடந்த வியாழக்கிழமை ஒப்புதல் வழங்கியது.


உக்ரைன் மீதான ரஷ்யாவின் ஆக்கிரமிப்பை அடுத்து பின்லாந்து மற்றும் சுவீடன் நேட்டோ அமைப்பில் உறுப்புரிமை பெற விண்ணப்பித்தன.

நேட்டோ உறுப்பு நாடான துருக்கி ஆரம்பத்தில் பின்லாந்தின் விண்ணப்பத்திற்கு மட்டுமே ஒப்புக்கொண்டது. இந்த நிலையில் சுவீடனின் விண்ணப்பத்திற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

மேலும், நேட்டோவில் சுவீடன் இணைவது குறித்து பெப்ரவரி மாத இறுதியில் ஹங்கேரி பாராளுமன்றத்தில் விவாதம் நடத்தப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. (5-6)

# நைட்ரஜன் வாயுமூலம் நிறைவேற்றப்பட்ட மரணதண்டனை

## ஐ.நா மனித உரிமைகள் கண்டனம்



(வோஷிங்டன்)

அமெரிக்க அலபாமா மாநிலத்தில் நைட்ரஜன் வாயுவை பயன்படுத்தி கொலை குற்றவாளி ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டிருப்பதை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் வோல்கர் டர்க் கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கென்னத் ஸ்மித் என்பவர் மற்றுமொரு நபருடன் இணைந்து கடந்த 1988 ஆம் ஆண்டு ஆயிரம் டொலர்கள் பணத்துக்காக பெண் ஒருவரை கொலை செய்தார். அவருக்கு நைட்ரஜன் வாயுவை பயன்படுத்தி கடந்த வியாழக்கிழமை மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது.

இது குறித்து கருத்து வெளியிட்டுள்ள வோல்கர் டர்க், "நைட்ரஜன் வாயு மூலம் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது தொடர்பில் கடும் கவலை ஏற்பட்டுள்ளது. கென்னத் யூஜின் ஸ்மித் என்பவருக்கு இந்த முறையில் மரண தண்டனை நிறைவேற்றப்பட்டமையானது மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

இந்த முறையில் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது இதற்கு முன்னர் பரீட்சித்து பார்க்கப்படவில்லை. இவ்வாறு ஒருவருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுவது சித்திரவதை செய்வதற்கு ஈடானது" எனத் தெரிவித்தார். (5-6)

# நடிகர் விஜயகாந்துக்கு பத்மபூஷண் விருது

## இந்திய மத்திய அரசு அறிவிப்பு

(டில்லி)

மறைந்த நடிகர் விஜயகாந்துக்கு பத்மபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஆண்டுக்கான இந்திய மத்திய அரசின் உயரிய விருதான பத்மபூஷண் விருதுகள் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, மறைந்த தே.மு.தி.க தலைவர் விஜயகாந்துக்கு பத்மபூஷண் விருது அறிவிக்கப்பட்டுள்ளது.

கலைத்துறையில் சிறந்த சேவையாற்றியதற்காக அவருக்கு இந்த விருது அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் முன்னாள் குடியரசு துணைத் தலைவர் வெங்கையா நாயுடு, தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் பாத்திமா பீவி, நடன கலைஞர் வை. ஜெயந்திமாலா, பிரபல தெலுங்கு நடிகர் சிரஞ்சீவி ஆகியோருக்கு பத்மபூஷண் விருதுகள் [illegible] குறிப்பிடத்தக்கது. (5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசின் இரு...

என்று நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்தார்.

தற்போது 32 ஆயிரத்திற்கும் அதிகமான கைதிகள் சிறைச்சாலையில் உள்ளனர். அவர்களில் 13,000 கைதிகளுக்கு போதுமான இடவசதி மட்டுமே சிறைச்சாலைகளில் காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## நெடுஞ்சாலை...

நெடுஞ்சாலைகளை பயன்படுத்தும் போது பாதைகளில் வாகனங்களுக்கு இடையில் சரியான இடைவெளியை பேணாதது பல விபத்துக்களை ஏற்படுத்துவதாக வீதி அபிவிருத்தி அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது. (ம-7)

## பொதுச்சபைக்...

யாமையின் காரணமாக அவ்விதமான முடிவுக்கு தான் வந்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுவினால் அங்கீகாரமளிக்கப்பட்ட புதிய நிர்வாகத்தினை அங்கீகரிப்பது தொடர்பில் பொதுச்சபைக்குள் ஏற்பட்ட குழப்பித்தினை அடுத்து நிர்வாகத்தினை ஆதரிப்பதா? இல்லையா? என்பது தொடர்பில் முன்வைக்கப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக 112 வாக்குகளும் எதிராக 104 வாக்குகளும் அளிக்கப்பட்டுள்ளன.

இந்த முடிவுகளின் அடிப்படையில் புதிய நிர்வாகத்திற்கு பொதுச்சபை அங்கீகாரம் அளித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழரசுக்கட்சியின் 17ஆவது தேசிய மாநாட்டின் முதல்நாள் நேற்று திருகோணமலை உப்புவெளியில் உள்ள தனியார் விடுதியில் நடைபெற்றது. இதன்போது முற்பகல் மத்தியகுழுக் கூட்டமும், பிற்பகலில் பொதுச்சபைக் கூட்டமும் நடைபெற்றது.

**மத்திய செயற்குழுக் கூட்டம்**

அதனடிப்படையில் மத்திய செயற்குழுக் கூட்டம் முற்பகல் 10 மணிக்கு ஆரம்பமானது. இதன்போது முதலில் பொதுச்செயலாளர் பதவிக்கான தெரிவு தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

அதன் போது, ஞானமுத்து சிறிநேசன், குலநாயகம் மற்றும் சண்முகம் குகதாசன் ஆகியோர் அப்பதவியை வகிப்பதற்கு தமது விருப்பத்தினை வெளிப்படுத்தினார்கள்.

எனினும் அதன்பின்னர் பலதரப்பட்ட கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டு பொதுச்செயலாளராக சண்முகம் குகதாசன் நியமிக்கப்பட்டதோடு, சிரேஷ்ட உபதலைவராக சீ.வீ.கே.சிவஞானமும் இணைப் பொருளாளர்களாக ஞா.சிறிநேசன், கனகசபாபதி ஆகியோரும் துணைத் தலைவர்களாக கே.வி.தவராசா, சாள்ஸ் நிர்மலநாதன், தவராசா கலையரசன், பாக்கியசெல்வம் அரியநேந்திரன், வைத்தியர் சத்தியலிங்கம் ஆகியோரும் இணை செயலாளர்களாக திருமதி சாந்தி, சிறிஸ்கந்தராஜா, திருமதி ரஞ்சனி கனகராஜா, சரவணபவன், சாணக்கியன், சிவமோகன் ஆகியோரும் சுமந்திரன் உட்பட 13 உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

இதன்பின்னர் மதியபோசனத்துக்கான இடைவேளை விடப்பட்டதோடு தொடர்ந்து பொதுச்சபைக் கூட்டத்தின் முதலாவது நாள் அமர்வு ஆரம்பமானது.

**பொதுச்சபைக் கூட்டம்**

பொதுச்சபைக் கூட்டம் ஆரம்பமாகியதும் மீண்டும் பொதுச் செயலாளர் நியமனம் சம்பந்தமாக சர்ச்சைகள் ஏற்பட்டன. உறுப்பினர்களிடையே வாதப்பிரதிவாதங்கள் அதிகரித்து கைகலப்பில் ஈடுபடுமளவிற்கு நிலைமைகள் மோசமாகின. இதனையடுத்து பல்வேறு இணக்கப்பாடுகளை எட்டுவதற்கான முன்மொழிகள் செய்யப்பட்ட போதும் உறுப்பினர்களில் சிலர் நிர்வாகத் தெரிவினை ஏற்றுக்கொள்வதற்கு எதிர்ப்பினை வெளியிட்டார்கள். அது மட்டுமன்றி, பொதுச் செயலாளராக குகதாசனை நியமிப்பதற்கும் எதிர்ப்பினை வெளியிட்டனர்.

இதனால், பொதுச்சபைக் கூட்டத்தில் பல்வேறு வாதப்பிரதிவாதங்கள் நிகழ்ந்ததை அடுத்து, பொதுச்செயலாளர் தெரிவுக்கான பகிரங்கமான வாக்கெடுப்பினை நடத்துமாறு கோரினார்கள்.

எனினும், குறித்த நிர்வாகத் தெரிவுக்கு மத்திய செயற்குழு அங்கீகாரம் அளித்துள்ளதன் அடிப்படையில் மீண்டும் தனியொரு பதவிநிலைக்காக வாக்கெடுப்பு நடத்த முடியாது என்ற விடயத்தினை சுமந்திரன் சுட்டிக் காட்டினார்.

இந்நிலையில் தமிழரசுக் கட்சியின் தலைவர் தவிர்ந்த புதிய நிர்வாகத்தினருக்கான அனுமதியைக் கோரும் பிரேரணையை கட்சியின் புதிய தலைவர் சிவஞானம் சிறீதரன் முன்மொழிந்தார். அதனையடுத்து, பீற்றர் இளஞ்செழியன் அதனை வழிமொழிந்தார்.

தொடர்ந்து, குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. உறுப்பினர்கள் தங்களது கைகளை உயர்த்தி ஆதரவினையும் எதிர்ப்பினையும் வெளியிட்ட நிலையில் அதனடிப்படையில் எண்ணிக்கை கணிக்கப்பட்டது. அந்த வகையில் பிரேரணை எட்டு மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

மேலும் குறித்த பிரேரணை மீதான வாக்கெடுப்பில் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் பங்கேற்கமுடியாது என்ற விடயத்தினை சுமந்திரன் சுட்டிக்காட்டினார்.

ஏனெனில் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் ஏற்கெனவே நிர்வாகத் தெரிவுக்கு ஆதரவளித்திருந்த நிலையில் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது என்று அவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் மத்திய செயற்குழு உறுப்பினர்களின் பங்கேற்பின்றியே பொதுச்சபை உறுப்பினர்களின் பங்கேற்புடன் வாக்கெடுப்பு முடிவுக்கு கொண்டு வரப்பட்டு முடிவுகள் அறிவிக்கப்பட்டது. எனினும் உறுப்பினர்களிடையே சர்ச்சைகள் தொடர்ந்தும் நீடித்தன.

இந்த நிலைமையை தொடர்ச்சியாக அவதானித்துக்கொண்டிருந்த மாவை சேனாதிராஜா உறுப்பினர்களை அமைதியாக இருக்குமாறு கோரிக்கை விடுத்தார். அனைவரும் ஒற்றுமையாக நாளை (இன்று) நடைபெறவுள்ள பகிரங்க தேசிய மாநாட்டை நிறைவு செய்வதற்கு ஒத்துழைப்புக்களை வழங்குமாறு கோரிய போதும் நிலைமைகள் சுமூகமடைந்திருக்கவில்லை.

இதனையடுத்து மாவை சேனாதிராஜா ஒலிவாங்கியைப் பெற்று 17ஆவது தேசிய மாநாட்டை தான் ஒத்திவைப்பதாக அறிவித்துவிட்டு கூட்டத்தினை முடிவுக்கு கொண்டு வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கிராம...

திகதி இடம்பெற்ற போட்டிப் பரீட்சைக்கு அமைய 4,232 பேர் நேர்முகத் தேர்வுக்கு தகுதி பெற்றுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு நேர்முகத்தேர்வுக்கு தகுதி பெற்றவர்கள் தொடர்பான தகவல்களை உள்நாட்டலுவல்கள் அமைச்சின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் பார்வையிட முடியும் என இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

தற்போது தெரிவானவர்களிடம் நேர் முகப் பரீட்சை நடத்தப்பட்டதன் பின்னர் அவர்கள் மிக விரைவில் பணிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## சந்திரிகா...

சுதந்திரக் கட்சியை முதன்மையாக கொண்டு புதியதொரு கூட்டணியை ஆரம்பிப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

அத்துடன், இந்தக் கூட்டணியில் சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்கள் மாத்திரமின்றி ஏனைய அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் தரப்பினரும் இணைத்துக் கொள்ளப்படுவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கூட்டணியில், சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் அதே அதிகாரம் ஏனைய கட்சிகளின் உறுப்பினர்களுக்கும் வழங்கப்படவுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணியின் சில உறுப்பினர்களும் இந்த கூட்டணியில் இணைந்து கொள்ளவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

மேலும், இந்தக் கூட்டணியின் சின்னத்தை தெரிவு செய்வது தொடர்பான பேச்சுக்கள் எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)


லக்கி 7 VIP
திகதி 2024.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 0198
S 0 7 2 3 2 9 S

தன நிதானய
திகதி - 2024.01.27
சீட்டிழுப்பு இலக்கம் - 1402
O 34 65 75 80 O
02481

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3614
சீட்டிழுப்பு திகதி 27.01.2024
S 12 15 50 69
S 86955

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.01.27
சீட்டிழுப்பு இலக்கம் 0681
மகரம் 05 24 37 55 மகரம்
27221 12

மஹஜன சம்பத
திகதி 2024/01/27
சீட்டிழுப்பு இலக்கம் 5372
Y 2 8 8 6 8 7

மெகா பவர்
திகதி 27/01/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1720
J 19 05 25 47 68
52783

உத்தியோகபூர்வ முடிவுகள்
27.01.2024 வெற்றி வாரம் 080 வர்ணம் நீலம்
E 6 7 9 4 5 1
7 6 9 9 3
27,370,739.20
DLB தொலை பேசி: 011-2 333 546-47 Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2346 வர்ணம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.27 தினம் சனிக்கிழமை
07 30 33 70 F
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 69,368,463.20
77737

சனிதா
திகதி 2024.01.27 வெற்றி வாரம் 4507 வர்ணம் இளம் பச்சை
22 35 56 62 W
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.50,407,197.20
3 7 5 5 4

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4058 வர்ணம் இள நீலம்
சீட்டிழுப்பு திகதி 2024.01.27 தினம் சனிக்கிழமை
21 36 42 50 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 3,756,116.80
298220

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 25 02 34 38 56
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு. 498,365,656.20
1522 சிவப்பு 27.01.2024 சனிக்கிழமை

அத கோடிபதி
சனிக்கிழமை வெற்றி வாரம்: 2172 வர்ணம்: மஞ்சள் சீட்டிழுப்பு திகதி: 2024.01.27
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரு.86,805,798.40
04 05 48 55 V
955985


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## V2 VISA SERVICES
## கனடா

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

• கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

**Sri lankan Visa Extention**
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு

(C-8224)



## துரித பொதிகள் சேவை

- சகல நாடுகளுக்கான கடிதங்கள் 3 நாட்களில் ஒப்படைக்கப்படும்.
- அவுஸ்திரேலியா விசேட சலுகை உணவுப்பொருட்கள், மருந்து, எண்ணெய் வகைகள் என்பன எம் ஊடாக அனுப்பிட முடியும்.
- ஏனைய நாடுகளுக்கும் விசேட சலுகைகள் உண்டு.

**திருமுருகன் பொதிகள் சேவை**
**321, K.K.S வீதி யாழ்ப்பாணம்.**

**0777 554 528**

(18785)



Zoom மூலமான வகுப்பு

## வரலாறு

**SB.sanu**
(பிரபல பாடசாலை ஆசிரியர்)

**(தரம் 06 - A/L வரை)**

- தரம் 10,11 paper Class
- A/L புதிய பிரிவுகள் (2024,2025 A/L)

90 புள்ளிக்கு மேல் உத்தரவாதம்

தொடர்புகளுக்கு : 077 83 43 666

(18629)



## விமலம் திருமண சேவை

தங்கள் தேடுதலுக்கும் தகுதிக்கும் ஏற்ற மணமகன், மணமகள் தேவையெனில் எம்மிடம் தொடர்பு கொள்ளவும். உள்நாட்டு/ வெளிநாட்டு மணமகன், மணமகள் தாராளமாக உள்ளன.

**+14372446737**
**கனடா +16476571347**
**077 240 9276**

(18521)



## காணி விற்பனைக்கு

அச்சுவேலி நகரிலிருந்து 500m தொலைவில் (union camp அருகாமையில்) இராச வீதியில் அமைந்துள்ள 6 பரப்பு தோட்டக்காணி விற்பனைக்கு உண்டு. குடி மனைகள் அமைக்க ஏற்றது. இவ்விரண்டு பரப்புக்களாகவும் விற்கப்படும். (மாலை 3.30 க்கு பின்னர் தொடர்பு கொள்ளவும்)

(18758)

**076 123 9673**


## ரூபாவின்...

யிடப்பட்டுள்ள வாராந்த அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி, ஜப்பானிய யென்னுக்கு நிகராக இலங்கை ரூபாயின் பெறுமதி 6 வீதத்தாலும் ஸ்ரேலிங் பவுண்டுக்கு நிகராக 1.7 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது. (ம-7)


## வேலையாட்கள் தேவை

எமது நிறுவனத்திற்கு கணனி ரைப்பிங் செய்யக்கூடிய பெண் பிள்ளைகள் தேவை. சகல விபரங்களுக்கும் நேரில் வருகை தரவும்.

(18760)

**செல்வா ரெலி கொமினிகேசன்**
**124, கோயில் வீதி, யாழ்ப்பாணம்.**
(வாகன புகைப்பரிசோதனை நிலையம் முன்பாக)



## கார், வான் விற்பனைக்கு

கார் மற்றும் GN - XXXX நிசான் செரினா, மோட்டார் சைக்கிள் ஆகிய வாகனங்கள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு :

**076 748 3028**
**077 255 7761**

(18733)



## IELTS CLASSES

கொழும்பு பல்கலைக்கழக ஆசிரியரினால்

IELTS, A1UK EXAM, ADVANCED GRAMMAR & SPOKEN ENGLISH 30% *Special offer for all the courses*

- GUARANTEED TO 7.5 in IELTS Exam.
- PASS in UK A1 Exam.
- Exam REGISTRATION CENTER.

(வாழ்க்கைத் துணையுடன் இணைவதற்கான பரீட்சை) A1 UK Exam IELTS | புதிய பிரிவுகள் ஆரம்பம்

OXFORD ENGLISH ACADEMY, Ariyakulam Junction, Jaffna.

**T.P : 077 780 3970, 074 007 1970**

(18230)



## வேலையாள் தேவை

யாழ். நகரில் உள்ள கடை ஒன்றிற்கு 18 – 30 வயதிற்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்புகளுக்கு :

**021 221 7600**
**075 988 1000**
**077 937 0000**

(18757)



## வாடகைக்கு

தெல்லிப்பழை அரச வைத்தியசாலைக்கு அண்மையில் புதிதாகக் கட்டப்பட்ட வீடு ஒன்று முழுமையாக அல்லது பகுதியாக வாடகைக்குண்டு. நிறுவனங்கள் அல்லது உத்தியோகத்தர்களுக்கும் பயனுடையது.

(18772)

**070 437 7822, 077 889 4115**



## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கைதடியில் 10 பரப்பு காணி A9 வீதி முகப்புடன் விற்பனைக்கு உண்டு.

விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
வட மாகாண சபை 300 மீற்றர்
கைதடி 4 சந்தி 200 மீற்றர் தூரம்

(18799)

**076 788 0591 | 077 129 4999**



## வெல்டிங் வேலையாள் தேவை

யாழ் நகரில் உள்ள கடை ஒன்றிற்கு அனுபவம் வாய்ந்த வெல்டிங் வேலையாள் தேவை. சம்பளம் நாள் ஒன்றிற்கு 3000/= மதிய உணவுடன்

தொடர்புகளுக்கு :

**077 937 0000**
**075 988 1000**

(18757)



## வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்

சுன்னாகம் புகையிரத நிலையத்திற்கு அருகில் உள்ள 3 பரப்புடன் கூடிய வீடு வாடகைக்கு வழங்கப்படும்

(18745)

**077 645 3862**



## A/L 2025(EM-only)

Biology & Chemistry (EM) classes in English Speaking Environment Starts on 01.02.2024,
**G.Mayurathan (Lecturer)**

(18735)

**Cola city 234, Navalar Road, Jaffna.**



## காணி விற்பனைக்கு

**புத்தூர் மட்டுவில் பிரதான வீதியோரம் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 20 அடி பாதையுடன் காணி துண்டுகள் விற்பனைக்கு உண்டு.**

**1 பரப்பு - 3 இலட்சம்**

மேலதிக விபரங்களுக்கு

(18773)

**074 260 0617, 077 612 2971**



## வீடு வாடகைக்கு உண்டு

சுன்னாகம் சந்திக்கும் மல்லாகம் சந்திக்கும் இடையில் வீடு வாடகைக்கு உண்டு.

(18800)

**077 957 5406**



## பராமரிப்பாளர் தேவை

ஆதரவு அற்ற அரச ஊழியர் ஒருவரை உணவு கொடுத்து பராமரிக்க வறுமையில் வாழும் இளம் குடும்பம் அல்லது ஆண்/பெண் பராமரிப்பாளர் தேவை.
( உணவு, இருப்பிடம் இலவசம் )

(18440)

**077 882 3330**
**077 880 4503**



## Happy Supermarket - உரும்பிராய்

உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...

| | | | |
|---|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - | 282 /= | |
| 1 Kg கோதுமை மா | - | 183 /= | |
| 1 Kg Prima கோதுமை | - | 189 /= | |
| 1 Kg றவை | - | 285 /= | |
| 1 Kg அரிசி மா | - | 199 /= | |
| 1 Kg சம்பா அரிசி | - | 230 /= | Max 3Kg |
| 1 Kg பெரிய கடலை | - | 640 /= | |
| 1 Kg சோயா | - | 499 /= | |
| 01 Supiri ரின்மீன் | - | 490 /= | ~~850/=~~ |
| 180ml Sunsilk சம்போ | - | 440 /= | ~~480/=~~ |
| 01 Sunlight soap | - | 140 /= | ~~150/=~~ |
| 1.2 Kg Sunlight rose powder | - | 399 /= | ~~450/=~~ |
| 350g Anchor plus | - | 1129 /= | ~~1190/=~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - | 140 /= | ~~175/=~~ |

1040/=
Anchor
~~1110/=~~
Max - 02

(18804)

**யோக்கட் மொத்த கொள்வனவுகளிற்கு எம்மை நாடுங்கள்**

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

Happy Supermarket
0777 8080 30



## புதிய பிரிவுகள் ஆரம்பம்

வங்கியியல் கற்கை நெறிகள்
**Banking Courses**
**DBF & HDBF (10.02.2024)**
( IBSL நிறுவனத்தின் மறுசீரமைக்கப்பட்ட பாடவிதானம் )

கணக்காளர் கற்கை நெறிகள்
**Chartered Accounting Courses**
Business level - I,II (10.02.2024)

தொழிற்துறைக் கணக்காளர் ஆவதற்கு
**aat** [ Sri Lanka]
(AA1 - 10.02.2024)
G.C.E.O/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்,
(AA2, AA3 -24.02.2024]

G.C.E. A/L பெறுபேற்றினை எதிர்பார்த்திருப்பவர்களும் கற்கலாம்.

**Certificate Course in English**

Further Details:
Jaffna College
Undergraduate Dept.
464, Hospital Road,
Jaffna.

**0212223382 | 0212229149**
**0774405917**

(C-8219)



## A/L PHYSICS

**24,25 Revision**
**தனிப்பட்ட, குழு வகுப்புகளிற்கு**
**Ranjit Sir**
077 600 4896
Y.M.C.A தம்பசிட்டி, 2 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.

(18711)



## விற்பனைக்கு

இலண்டனிலிருந்து கொண்டுவரப்பட்ட Microwave oven sharp தயாரிப்பு Manual புத்தம் புதியது மற்றும் இரண்டு கோப்பை கொண்ட panasonic mixsy விற்பனைக்கு உண்டு.

(C-8223)

**021 222 6412**


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண் பாதி, பெண் பாதி அதிசயப் பறவை



நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நடந்த அதிசயம் தற்போது நடந்திருக்கிறது. அது தான் ஆண் மற்றும் பெண் இரண்டு பாலினமுமே சேர்ந்து ஒரு அறிய வகை பறவை கேமராவில் புகைப்படமாக எடுக்கப் பட்டிருக்கிறது. இரண்டு பாலின கலவையாக இருக்கும் அந்த பறவையானது தேன்கொடி இனத்தைச் சேந்தது என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த அரியவகை பறவையை ஓட்டாகோ பல் கலைக்கழக விலங்கியல் பேராசிரியர் ஹமிஷ் ஸ்பென்சர், கொலம்பியாவில் விடுமுறையின் போது கண்டறிந்தார்.

இந்த பறவையின் தோற்றமானது பாதி ஆண் பறவையின் தோற்றமும் மறுபுறம் பெண் பறவையின் தோற்றத்தில் காணப்பட்டது. அதன் ஒரு பாதியில் அக்வா-நீல இறகுகளும், மறுபுறம் மஞ்சள்-பச்சை நிற இறகுகளும் நடுவில் தெளிவான எல்லையுடன் இருந்தன. இப்படியான இரண்டு நிறத்திற்கான காரணம் என்பது ஜினாண்ட்ரோமார் பிஸத்தால் ஏற்பட்டதாகக் கருதப்படுகிறது.

ஒரு அரிய செல் பிரிவு பிழை, இது இரண்டு வெவ்வேறு விந்தணுக்களால் கருத்தரிப்பதற்கு அனுமதிக்கும் முட்டையை உருவாக்குகிறது.

இதன் காரணமாகவே இந்த அரிய வகை ஆண் பெண் பாதியாக இருப்பதற்கு இதுவே காரணம் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

இந்தப் பறவையானது தோற்றத்தில் மட்டும் ஆண் பாதி பெண் பாதியாக இருக்கவில்லை. அந்த பறவையை ஆராய்ச்சி செய்து உயிரியல் ரீதியாகப் பாதி ஆண் மற்றும் பாதி பெண் உறுதிப் படுத்தினர். இந்த பறவையை ஆராய்ச்சி செய்த ஆராய்ச்சியாளர்கள் கூறுகையில் "இந்த பறவையானது இதன் சேர்ந்த பறவைகளைத் தவிர்த்தது. அதனுடைய இன பற வைகள் இந்த அரியவகை பறவையைத் தவிர்த்தது. ஆகையால் இது இனப் பெருக்கம் செய்வதற்கு வாய்ப்புகள் இல்லை" என்று பத்திரிக்கையில் தெரிவித்தனர்.

நூறு ஆண்டுகளுக்கு முன்னாள் நடந்த அதிசய மானது தற்போது நடந்திருப்பது அனைவரின் கவனத்தையும் ஈர்த்துள்ளது.







தன் வீட்டின் அருகிலிருக்கும் சலூனில் முடிதிருத்தம் செய்யும் சாச்சாவின் (லால்) அபாரத் திறமையைப் பார்த்து சிறுவயதிலேயே பெரிய ஹேர்ஸ்டைலிஸ்ட் ஆக வேண்டும் எனக் கனவு காண்கிறான் கதிர். "முடிதிருத்துவது வெறும் தொழில் அல்ல கலை" என அதன்மீது தீராக்காதல் கொள்கிறான். வழக்கமான தடைகளைக் கடந்து ஹீரோ எப்படி வெல்கிறான் என்பதே "சிங்கப்பூர் சலூன்" படத்தின் ஒன்லைன்.

டைமிங் ஒன்லைனர்களில் கலக்கும் ஆர்.ஜே.பாலாஜிக்கு இந்தப் படத்தில் ஆழமான நடிப்பை வெளிப்படுத்தவும் வாய்ப்புகள் கிட்டியிருக்கின்றன. அவற்றில் டிஸ்டிங்க்ஷன் பெறவில்லையென்றாலும் கதிர் என்ற கதாபாத்திரமாகப் பொருந்திப்போகிறார். ஆனால், அவருடன் நம்மை முழுவதுமாக ஒன்றவிடாமல் செய்துவிடுகிறது மிகவும் சாதாரணமாக எழுதப்பட்டிருக்கும் அவரது கதாபாத்திர வரைவு. நாயகியாக வரும் மீனாக்ஷி சௌத்ரிக்கு அழுவதைத் தவிரப் பெரிதாக வேலை இல்லை. குறையொன்றுமில்லாமல் அதை நிறைவாகச் செய்திருக்கிறார்.

[illegible] எனக் [illegible] வேடங்களில் [illegible] தங்களுக்குக் கொடுக்கப்பட்ட பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். ஆனால், இவர்களையெல்லாம் தாண்டி படத்தில் அதிகமாக ஸ்கோர் செய்வது சத்யராஜ்தான். கஞ்சத்தனம் மிகுந்த மாமனாராக அவர் செய்யும் அலப்பறைகள் காமெடி பட்டாசு. அதிலும் இடைவெளிக்கு முந்தைய பத்து நிமிடங்கள் செம லூட்டி! அவர் என்ட்ரி லேட்டாக இருந்தாலும் அவரது நகைச்சுவைதான் முதல் பாதியின் ஹைலைட். கதை அவ்வப்போது ஒரே இடத்தில் தேங்கி நின்றாலும், சிறுவயது காட்சிகளிலிருந்தே நகைச்சுவையைச் சரியான அளவில் சேர்த்து ஜாலியான வைபில் நம்மை வைத்திருப்பதில் வெற்றிகாண்கிறார் இயக்குநர் கோகுல்.

யதார்த்துக்கு மிக நெருக்கமாக, அக்கட தேசத்து ஃபீல்குட் படம் போலத் தொடங்கி காமெடி படமாக உருமாறி கடைசியில் கருத்தூசி போட்டு நம்மை வெளியில் அனுப்பிவைக்கிறார்கள். நன்றாக முடி வெட்டிய பிறகு சலூன்களில் "அந்த சர்வீஸ் வேணுமா இந்த சர்வீஸ் வேணுமா?" எனக் கேட்கும்போது தேவையில்லாத ஒரு சர்வீஸைத் தேர்வுசெய்துவிட்ட உணர்வைத் தருகிறது ஹசிங்கப்பூர் சலூன்"!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 390





**முப்பத்து நான்காம் அத்தியாயம் அநுராதபுரம்**

சூரியன் அஸ்தமனமாகும் சமயத்தில் அவர்கள் அநுராதபுரத்தை அணுகினார்கள். இலங்கைத் தீவின் தொன்மை மிக்க அத்தலைநகரத்தைச் சற்றுத் தூரத்திலிருந்து பார்த்தபோதே வந்தியத்தேவன் அதிசயக் கடலில் மூழ்கிப் பேசும் சக்தியை இழந்தான். அநுராதபுரத்தைப் பற்றி அவன் பலர் சொல்லக் கேள்விப் பட்டதுண்டு. அந்நகரைப் பற்றி அவர்கள் செய்த வர்ணனைகளிலிருந்து அதன் தோற்றம் இப்படி இருக்குமென்று அவன் கற்பனை செய்து பார்த்ததும் உண்டு.

ஆனால் அவனுடைய கற்பனைகளையெல்லாம் அந்த மாநகரம் விஞ்சியதாயிருந்தது. அம்மம்மா! இதன் மதில் சுவர் தான் எத்தனை பெரியது? எப்படி இருபுறமும் நீண்டு கொண்டே செல்கிறது? எந்த இடத்திலே அச்சுவர் வளைந்து திரும்புகிறது என்று தெரிந்து கொள்ளவும் முடியவில்லையே? மதில் சுவருக்கு உள்ளே எத்தனை எத்தனை கோபுரங்களும் ஸ்தூபங்களும் மண்டபச் சிகரங்களும் தலைதூக்கிக் கம்பீரமாக நிற்கின்றன! ஒன்றுக்கொன்று அவை எவ்வளவு தூரத்தில் நிற்கின்றன! இவ்வளவும் ஒரே நகரத்துக்குள்ளே, ஒரே மதில் சுவருக்குள்ளே அடங்கியிருக்க முடியுமா? காஞ்சி, பழையாறை, தஞ்சை முதலிய நகரங்களெல்லாம் இந்த மாநகரத்தின் முன்னே எம்மாத்திரம்? அசோக சக்கரவர்த்தியின் காலத்தில் பாடலிபுத்திரமும் விக்ரமாதித்தனின் ஆட்சியில் உஜ்ஜயினி நகரமும் கரிகால் வளவன் காலத்தில் காவேரிப்பட்டினமும் ஒருகால் இந்த நகரத்தைப் போல் இருந்திருக்கலாம்! தற்காலத்தில் உள்ள வேறு எந்தப் பட்டணத்தையும் இதற்கு இணை சொல்ல முடியாது!

மதில் சுவரும் அதன் பிரதான வாசலும் நெருங்க நெருங்க, நகரை நோக்கிச் செல்வோரின் கூட்டம் அதிகமாகி வந்தது. தமிழர்களும் சிங்களவர்களும் பிக்குகளும் இல்லறத்தாரும் ஆண்களும் பெண்களும் சிறுவர் சிறுமிகளும் பெருங்கூட்டமாகச் சென்றார்கள். எல்லோரும் தேர் திருவிழாவுக்குச் செல்கிறவர்களைப் போல் குதூகலமாகச் சென்றார்கள். அவர்களில் ஒரு சிலர் நமது பிரயாணிகள் மூவரையும் கவனிக்கவும் சுட்டிக்காட்டவும் தொடங்கினார்கள். இதைக் கண்டதும் பொன்னியின் செல்வர் மற்ற இருவருக்கும் சமிக்ஞை செய்துவிட்டு, இராஜபாட்டையிலிருந்து விலகிக் குறுக்கு வழியில் சென்றார்.

மரங்களால் மறைக்கப் பட்டிருந்த ஒரு சிறிய செய் குன்றத்தின் அடிவாரத்தில் வந்து குதிரையை நிறுத்தினார். பின்தொடர்ந்து வந்த இருவரையும் பார்த்து, "குதிரைகள் வெகு தூரம் வந்திருக்கின்றன. சற்று நேரம் இளைப்பாறட்டும். நன்றாக இருட்டிய பிறகு நகருக்குள் போவோம்!" என்றார்.

குதிரைகள் மீதிருந்து மூவரும் இறங்கி ஒரு கற்பாறை மீது உட்கார்ந்தார்கள். "இவ்வளவு கூட்டமாக ஜனங்கள் போகிறார்களே? இன்றைக்கு இந்த நகரத்திலும் ஏதாவது உற்சவமோ?" என்று வந்தியத்தேவன் கேட்டான்.

"இந்த நாட்டில் நடக்கும் திருவிழாக்களுக்குள்ளே பெரிய திருவிழா இன்றைக்குத்தான்!" என்றார் இளவரசர்.

அந்தப் புத்தர் சிலையின் பத்ம பாதங்கள் எனக்கு ஒரு முக்கியமான செய்தியை அறிவித்தன என்றார்.

"ஆகா! எங்கள் காதில் ஒன்றும் விழவில்லையே?"

"மௌன பாஷையில் அச்செய்தி எனக்குக் கிடைத்தது."

"அது என்ன செய்தி? எங்களுக்குத் தெரியலாமா?"

"இன்றிரவு பன்னிரெண்டு நாழிகைக்கு அநுராதபுரத்தில் சிம்மதாரைத் தடாகத்துக்கு அருகில் நான் வர வேண்டுமென்று பகவானுடைய பாதமலர்கள் எனக்கு அறிவித்தன!" என்றார் பொன்னியின் செல்வர்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வேட்டை நாயும் நரியும் சேவலும்

ஒரு கிராமத்திலே ஒரு வேட்டைநாயும் சேவலும் நண்பர்களா இருந்தாங்க. அவங்க ஒருநாள் உலகத்த சுத்திப்பாக்க நினைச்சாங்க. அதனால எல்லா ஊருக்கும் போகணும்னு முடிவு செஞ்சாங்க.

பக்கத்து ஊருக்கு போக காட்டு வழியா நடந்து போறப்ப இருட்டிடுச்சு. அதனால அன்னைக்கு இராத்திரி அங்கேயே தங்கமுடிவு பண்ணினாங்க.

காட்டு விலங்குகள் கிட்ட இருந்து தூங்கும் போது தங்களை பாது காத்திட ஒரு நல்ல இடத்த தேடினாங்க அவங்க.



அட்டத்தான் ஒரு பெரிய மரம் அவங்க கண்ணுல பட்டுச்சு. அந்த மரத்தில இருக்குற கிளை சேவலுக்கு பாதுகாப்பாகவும் அதேநேரத்துல நாய்க்கு பாதுகாப்பாகவும் மரத்துக்கு பின்னாடி ஒரு பொந்தும் இருந்துச்சு. உடனே நாய் அந்த பொந்துக்குள்ளேயும் சேவல் மரத்து மேலே யும் பாதுகாப்பா இருந்தாங்க.

காலையில விடிஞ்சதும் தூக்கத்துல இருந்து எழுந்திரிச்ச சேவல், தான் கிராமத்துல இருக்குறதா நினைச்சுக்கிட்டு கொக்கரக்கோன்னு கூவிச்சு.

அதைக் கேட்ட நரி ஒன்னு இன்னைக்கு நல்ல இறை மாட்டிச்சின்னு அந்த மரத்துக்கு ஓடி வந்துச்சு.

மரத்து மேல் இருக்கிற சேவலை பார்த்ததும் சேவலாரே சேவலாரே எங்கள் காட்டுக்கு உங்களை வரவேற்கிறேன்.

உங்கள் வரவு நல்வரவாக இருக்கட்டும்னு சொல்லிச்சு. தொடர்ந்து சொல்லிச்சு கீழ இறங்கி வாங்க நாம நண்பர்களாக இருக்கலாம் என்று சொல்லிச்சு.

அதை கேட்ட சேவல் உஷாராகிடுச்சு, முகஸ்துதி செய்கிற நரிக்கு தக்க பாடம் சொல்லணும்னு நினச்சுச்சு.

உடனே என்னால கீழ வர முடியாது. ஆனால் நீங்க மேல வர சுலபமான வழி மரத்துக்கு பின்னாடி இருக்குன்னு சொல்லிச்சு.

உடனே பின்னாடி வழியா மேல போகலாம்னு ஆசையோட நரி மரத்துக்கு பின்னாடி போச்சு.

அந்த பேச்சு எல்லாம் அமைதியா கேட்டுகிட்டு இருந்த வேட்டை நாய் நரியை அடிச்சி தொரத்திடுச்சு.

புத்திசாலியா இருந்தா தங்களுக்கு வர்ற எல்லா ஆபத்துகளையும் தவிர்க்கலாம்ன்னு தெரிஞ்சி வச்சிருந்த சேவலும் வேட்டைநாயும் ஒன்னுக்கு ஒன்னு துணையா எல்லா ஊர்களையும் சுத்தி பார்த்து சந்தோசப்பட்டுச்சுங்க.

நீதி :- முகஸ்துதி செய்பவர்களை நம்ப கூடாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org